விலை சதம் 50 ★ ★ பக்கங்கள்—10

சுவையான ஐஸ்கிறீம் வகை
களுக்கும் கோழிப் புரியாணி
நூடில்ஸ், பொம்பே சுவிட்ஸ்
றிக்கோ பீடா
வகைகளுக்கும்
றிக்கோஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

# ஈழநாடு
## வார மலர்
THE EELA NADU VARAMALAR

மில்க்வைற் செய்தி
வெளியீடு: 15
15 மில்க் வைற் நீல சோப்
அல்லது 2 [illegible] சோப்
அல்லது 2 மெமக்கிகட்டட்
சோப் மேலுறைகளை அனுப்பி
மேற்படி செய்தியைப்
பெற்றுக்கொள்ளுங்கள்
விநியோகப் பகுதி
மில்க்வைற்
சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. எண். 77,
யாழ்ப்பாணம்.

மலர் 19 | மாசி 30 | ரபிஅவ்: [illegible] | ஞாயிற்றுக்கிழமை | [13—3—77] | இதழ் 31

# இலங்கை ரூபாவின் பெறுமதி
# 20 வீதத்தால் அதிகரிப்பு!

## யு.எஸ். டாலர்-7 ரூ 28சதம்; பவுண் ஸ்டேர்லிங் ரூ.12-51

கொழும்பு, சனி

**இலங்கை ரூபாவின் பெறுமதி 20 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்.**

**இந்த ரூபா மதிப்பு அதிகரிப்பு உடன் அமுலுக்கு வந்துள்ளது.**

இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்ததை அடுத்து இலங்கையில் அமெரிக்க டாலினதும், பவுண், ஸ்டேர்லிங்கினதும் பெறுமதி குறைந்துள்ளது.

**டாலர் 7ரூபா 28சதம்**

இதுவரை 8ரூபா 72 சதமாக இருந்த அமெரிக்க டாலர் 7 ரூபா 28 சதமாகக் குறைந்துள்ளது.

டாலர் ஒன்று 14 ரூபா 38 சதமாக இருந்த வெளிநாட்டு நாணயமாற்று சான்றிதழின் பெறுமதி 12 ரூபா 01 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**பவுண்-12 ரூபா51 சதம்**

14 ரூபா 97 சதமாக இருந்த பவுண் ஸ்டேர்லிங் 12 ரூபா 51 சதமாகக் குறைந்துள்ளது.

பவுண் ஒன்று 24 ரூபா 70 சதமாக இருந்த வெளிநாட்டு நாணயமாற்று சான்றிதழ் 20 ரூபா 65 சதமாகக் குறைந்துள்ளது.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, சனி

கொழும்பில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 606-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு:
**54 G 0423**
**ரூ. 1,00,000**

இரண்டாவது பரிசு:
**57 F 0408**
**ரூ. 40,000**

மூன்றாவது பரிசு:
**15 E 0744**
**ரூ. 10,000**

தலா 1,500 ரூபா வீதம் 100 ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 33 A 0899 | 17 B 0975 |
| 22 B 0380 | 27 B 0516 |
| 51 C 0957 | 04 D 0559 |
| 08 D 0781 | 17 D 0659 |
| 24 D 0403 | 35 D 0694 |
| 46 D 0902 | 51 D 0851 |
| 54 D 0071 | 69 D 0449 |
| 02 E 0557 | 12 E 0687 |
| 25 E [illegible] | 32 E 0172 |
| 42 E 0831 | 43 E 0909 |
| 56 E 0607 | 58 E 0269 |
| 58 E 0746 | 17 F 0887 |
| 30F 0379 | 35 F 0899 |
| 40 G 0880 | 50 G 0759 |
| 06 H 0610 | 30 H 0860 |

(10-ம்பக்கம் பார்க்க)

## பொருட்களின் விலை உள்நாட்டில் குறையும்
### பீலிக்ஸ் அறிக்கை

கொழும்பு, சனி

ரூபாவின் மதிப்பு அதிகரித்துள்ளதால் உள்நாட்டில் பல பொருட்களின் விலை குறையும் என்று நிதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கு உலக நாடுகளில் அதிக கிராக்கி இருந்து வந்துள்ளமையினாலேயே இலங்கையின் ரூபா மதிப்பை 2 வீதம் அதிகரிக்க முடிந்தது என்றும் இதன் மூலம் இறக்குமதி செலவினத்தை 16 வீதத்தால் குறைக்க முடியும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூபா மதிப்பு அதிகரிப்பு தற்காலிக நிகழ்வு அல்ல என்றும் நிரந்தர தோற்றமே ஆகும் என்றும் திரு. பீலிக்ஸ் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

70-ம் ஆண்டு 5 ரூபா 37 சதமாக இருந்த ஒரு கிலோ தேயிலை இப்போது 14 ரூபா [illegible] சதமாக அதிகரித்துள்ளது. இது 150 வீத அதிகரிப்பு ஆகும். இதேபோன்று றப்பர் விலையும் 150 வீதம் அதிகரித்துள்ளது என்றும் அறிக்கையில் [illegible] ப்பட்டுள்ளது.

## தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு
# கருத்தரங்குகள் மூலம் 10ஆயிரம் பேரை சேர்க்க
### காசி ஆனந்தன் உறுதி

கொழும்பு புதன்

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பத்தாயிரம் உறுப்பினர்களை புதிதாக சேர்க்கும் பணியில் தாம் ஈடுபட்டிருப்பதாகவும் இவர்களிடமிருந்து தலைக்கு ஒரு ரூபாவீதம் சந்தா அறவிடப்படும் என்றும் கவிஞர் காசி ஆனந்தன் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி கருத்தரங்குகள் மூலம் இவ்வாறு உறுப்பினர்கள் சேர்க்கப் படுவர்கள் என்றும் கண்டாமணிக்கு ஒப்பிட்ட கவிஞர் காசிஆனந்தன் கவிஞர், கண்டாமணி மூலமே கருத்தரங்குகளை கோயில் கூறினார்.

(10-ம் பக்கம் பார்க்க)

# ரோஹண விஜயவீராவை விடுதலைசெய்யக் கோரிக்கை

கொழும்பு, சனி

காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல்கைதிகள் அனைவருமே விடுதலைசெய்யப்படவேண்டும் என்று ஜனதாகவிமுக்திபெரமுனை அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஜனதா கவிமுக்திபெரமுனையின் கூட்டமொன்று நேற்று ஹைட்பார்க்கில் நடைபெற்றது. தடை செய்யப்பட்டிருந்த இக்கட்சி அவசரகால நிலைமை அகற்றப்பட்டதை அடுத்து மீண்டும் செயல்பட ஆரம்பித்துள்ளது.

ஜனதாகவிமுக்தி பெரமுனையின் தலைவர் ரோஹணவிஜயவீர உட்பட ஏனைய தலைவர்களும் விடுதலை செய்யப்படவேண்டும் என்று இக் கட்சி நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களையும் விடுதலை செய்யவேண்டுமென கோரப்பட்டுள்ளது. தமிழ் இளைஞர்களின் கோரிக்கைகளுக்கும் தங்களுக்கும் கருத்து வேறுபாடு இருந்தபோதிலும் தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய தம் கோரிக்கைகள் நியாயமானவையாகவே இருக்கும் என்றும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.



பிரபல எழுத்தாளர் காவலூர் ராஜதுரை கதை வசனம் எழுதி முத்தையா ராஜசிங்கம் தயாரித்து இம்மாத முடிவில் திரைக்கு வரவிருக்கும் 'பொன்மணி' படத்தின் படப்பிடிப்பு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது டைரக்டர் பத்தி ராஜா அருகே நின்று கவனிக்க ஒரு காட்சி படமாகிறது. இப்படத்தில் நடிக்கும் சர்வ மங்களம் கைலாசபதியும் இங்கு காணப்படுகிறார்.

# வெற்றிடம்

## மின்தறி இயக்குநர் பதவி(பெண்கள்)
(தற்காலிகம்)

சம்பள அளவுத்திட்டம் — சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட துண்டுச் சம்பள அடிப்படையில் வழங்கப்படும்.

வயதெல்லை — 1-3-77 இல் 20 வயதிற்குக் குறையாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல்வேண்டும்.

தகைமைகள் — நல்லூர் நெசவுப் பயிற்சிப் பாடசாலையினுல் வழங்கப்படும் இரு வருட தராதரப் பத்திரம் அல்லது,

4 வருடங்களுக்குக் குறைவில்லாத கைத்தறி அனுபவம்.

கோண்டாவிலில் உள்ள எமது தொழிற்சாலையிலிருந்து 3 மைல் எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு தேர்வின்போது முதலிடம் அளிக்கப்படும்.

விண்ணப்பங்களை தலைவர், யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், 10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 29-3-77 க்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல்வேண்டும். இடது பக்கமூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டிருத்தல்வேண்டும்.

**தலைவர்**

யாழ் மாவட்ட புடவை நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம்,
10/1, மணிக்கூட்டுவீதி.
யாழ்ப்பாணம்.

5667

# வெற்றிடம்

### 1. உள்துறை எண்பார்வையாளர்- தரம் V

சம்பள அளவுத்திட்டம் $\frac{300—500}{12\text{-}50X10—15X5}$

வயதெல்லை— 1-3-77-ல் 20 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

தகைமைகள்— 1. கொழும்பு சிரேஷ்ட தொழில் நுட்ப கல்லூரியினுல் நடாத்தப்படும் கணக்கியலில் டிப்ளோமா. அல்லது
2. கூட்டுறவு வேலையாளர் தராதரப் பத்திரம் உயர் தரம். அல்லது
3. கணக்குப் பதிவியலில் திறமைச்சித்தி கூடிய கூட்டுறவு வேலையாளர் சாதாரணதரப் பத்திரமும் இரண்டு வருடங்களுக்குக் குறைவில்லாத அனுபவமும். அல்லது
4. 5 வருடங்களுக்குக் குறைவில்லாத அனுபவமுடைய கூட்டுறவுப் பரிசோதகர். அல்லது
5. இரண்டு வருட அனுபவத்திற்குக் குறைவில்லாத இரண்டாம் வகுப்பு புத்தகப் பதிவாளர் சேவை. அல்லது
6. வகுப்பு 1-ல் ஒரு வருடத்திற்குக் குறைவில்லாத அல்லது வகுப்பு 2-ல் ஐந்து வருடங்களுக்குக் குறைவில்லாத அனுபவமுடைய கணக்கு லிகிதர் சேவை.

### 2. காசாளர் தரம் II

சம்பள அளவுத் திட்டம் $\frac{200—400}{10X10—12\text{-}50X8}$

வயதெல்லை— 1-3-77-ல் 20 வயதிற்குக் குறையாதவராயும் 30 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

தகைமைகள்— க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் எண் கணிதம் அல்லதுவர்த்தக எண் கணிதத்தில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களிற் பெற்றுள்ள சித்தியும், ஒரு வருடத்திற்குக் குறைவில்லாத அனுபவமும்-

### 3. லிகிதர்/தட்டெழுத்தாளர் (தமிழ்) தரம் II

சம்பள அளவுத் திட்டம் $\frac{200—340}{8X10—10X6}$

வயதெல்லை—1-3-77-ல் 20 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

தகைமைகள் — தமிழ் தட்டச்சிலும், எண்கணிதத்திலும் திறமைச்சித்தியுடன் கூடிய க. பொ. த. சாதாரணதரப் பத்திரமும் (வேகம் 20 சொற்கள் நிமிடத்திற்கு.)

மேற்கண்ட பதவிகளுக்கு யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை 13''X8'' அளவுள்ள படிவங்களிற் தயாரித்து, ''தலைவர், யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், 10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு 28-3-77-க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல்வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டிருத்தல் மேண்டும்.

**தலைவர்**

யாழ். மாவட்ட புடவை நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம்,
10/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

5668

## விற்பனைக்கு

பரந்தன் முல்லைத்தீவு றேட்டில் 10-ம் கட்டை சுண்டிக்குளத்தில் (விசுவமடுவிற்கு அண்மையில்) 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. கடிதமூலம் தொடர்புகொள்க. விளம்பர இல. 5581, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 5581

காணி: இயக்கச்சியிலிருந்து ஆறுமைல் தூரத்தில் நித்திய வெட்டையில் தென்னம்பிள்ளை, மாமரங்கள், பனைகள் அடங்கிய 10 ஏக்கர் விற்பனைக்குண்டு. தொடர்பு- கில்பறி கணபதிப்பிள்ளை, நித்தியவெட்டை, முள்ளியான். 5653

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண) பரீட்சை விண்ணப்ப படிவம் கல்வித் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்குச் சரியாக அச்சிடப் பெற்றது. விலை சதம் 15, மேற்படி விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு உதவியான முழு விபரமும் அடங்கிய விபர இதழ் சதம் 60. தபால் மூலம் பெற உரியதொகைக்கு முத்திரைகளும் 15 சதமுத்திரை ஒட்டிய என்பலப்பும் அனுப்புக. விற்பனையாளருக்குக் கழிவுண்டு. ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் அல்லது பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். 5656

# அறிவித்தல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் சிவன் ஆலய பங்குனி உத்தரவிழா 3-4-77-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். அன்றைய இரவு நிகழ்ச்சிகள் கொடுக்க விரும்புபவர்கள் நிகழ்ச்சியின் தன்மை, தேவையான நேரம், நிகழ்த்துபவரின் பெயர் போன்ற விபரங்களை 25-3-77-ந் திகதிக்கு முன் செயலாளர் நாகதம்பிரான் சிவன்ஆலய பரிபாலன சபை புளியம்பொக்கணை, பரந்தன். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அன்றையதினம் கடைபோட விரும்புபவர்களும் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு 31-3-77-ந் திகதிக்குமுன் அறிவிக்கவேண்டும்.

செயலாளர்,
நாகதம்பிரான் சிவன்ஆலய
பரிபாலன சபை,
புளியம்பொக்கணை.

5654

# சிறுவிளம்பரம்

## விற்பனைக்கு

க. பொ. த. (சாதாரண) பரீட்சை 1977. விண்ணப்பப் படிவங்களை 50 சதம் செலுத்திப்பெறலாம். யாழ். சட்ட நிலையம், பிரதானவீதி, யாழ்ப்பாணம். 5647

4 பரப்புக்காணி. 3 படுக்கை அறைள் கொண்ட வீட்டுடன் கந்தர் மடத்தில் விற்பனைக்குண்டு. வளாகம் அண்மையில். விபரங்கட்கு கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 5657 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 5657

கல்வி பொதுத் தராதர (சாதாரண)ப் பரீட்சை 1977 விண்ணப்பப்படிவம் விலைசதம் ஐம்பது. சொந்த விலாசமிட்டு பதினைந்து சத முத்திரை ஒட்டிய தபால் உறையுடன் ஐம்பது சத முத்திரை அனுப்பித் தபாலில் பெற்றுக்கொள்ளலாம். திருமால் அச்சகம், முள்ளானை, இளவாலை. 5643

16 குழிக்காணியில் சகல வசதிகளுடனும் வீடு காங்கேசந்துறை காட்டடைப்பு வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க ஜீவரட்ணம், காட்டடைப்புவீதி, காங்கேசந்துறை. 5677

மோட்டார் சைக்கிள் 5ஸ்ரீ 7000 தொடர் B.S.A. புதிய நிலையில். 16,000 மைல்கள் மட்டும் ஓடியுள்ளது. முதலாவது சொந்தக்காரர். 621, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தையடி, நல்லூர். 5664

## தேவை

தொழிற்சங்க அனுபவமுள்ள நிர்வாகக்காரியதரிசி தேவை. மும்மொழி தெரிந்தவருக்கு முன்னுரிமை. தகைமைக்கேற்ப சம்பளம். விண்ணப்பிக்க. விளம்பர இல: 5642, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 5642

ஆங்கில அறிவுடைய பெண் லிகிதர் தேவை. தட்டச்சு தெரிந்தவர்கள் விரும்பத் தக்கது. விபரங்களுக்கு சிவ்ாஸ் றவல் சேவிஸ், 11/A மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 5673

## தென்னந்தோட்டம் விற்பனைக்கு

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவிலுள்ள தேவிபுரத்தில், 25 ஏக்கர், 14 வருட தென்னந்தோட்டம். சிறந்த பலன்.

தொடர்பு: **எச். முத்துகுமாரு**
243, ஹள்ஸ்டோப் வீதி, — கொழும்பு-12 (5658)

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் நளவருடம் பங்குனி மாதம் 8-ம் நாள் (21-3-1977) திங்கட்கிழமை பகல் 12-18 முதல் 1-33 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

திருவளர் செல்வன்
**குணரத்தினத்திற்கும்**
(சட்டத்தரணி)

திருவளர் செல்வி
**தயாவதனிக்கும்**

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் பங்குபற்றி ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

திருமதி
**நா. வ.கந்தையா**
வட்டுக்கோட்டை.

Dr. த. கோபாலசிங்கம்
**தம்பதிகள்**
சண்டிலிப்பாய்

(5669)

## தேவை

இலங்கைப் பிரசையான பொற்கொல்லர் வகுப்பைச் சேர்ந்த நகைக்கடை நடத்தும் இந்துமத வாலிபருக்கு மணமகள் சாதகக்குறிப்புடன் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 5666 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5666

## கல்வி

G. C. E. (O.L.) G. C. E. (A/L) H. N. C. E. கலை,விஞ்ஞானம், வர்த்தகம், இரசாயனம் பௌதிகம், தாவரம், விலங்கியல் முதலிய பாடங்களுக்கு செய்கை முறைப் பயிற்சி (Practical) அளிக்கப்படும். தட்டச்சு, சுருக்கெழுத்து ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெறும். G. A. Q., G. S. Q., B. A., சட்டக்கல்வி (L. L. B.) கட்டிடப்படம் வரைதல் (Draughts man ship) வகுப்புகளும் உண்டு. உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (வித்தியா பகுதியினரால் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலை) பதிவாளர். 5650

இலங்கைப் பல்கலைக்கழக (வெளிவாரி) பட்டப்படிப்புகள் 1977. சட்டம்,கலை,வர்த்தகம், உயர்தாம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். யாழ். சட்ட நிலையம்,பிரதான வீதி, யாழ்ப்பாணம். 5648

திறமைச் சித்தி நிச்சயம். ஜி. சி. ஈ. உயர்தரம் துரித மீட்டல் பாடத்தொகுப்புகள் (ஆங்கில மொழி) பௌதீகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், தூய கணிதம், பிரயோக கணிதம் ஒவ்வொன்றும் ரூபா 16/- தபால்செலவு ரூபா 1/- யூனைட்டெட் இன்ஸ்ரியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 5661

திறமைச்சித்தி நிச்சயம். ஜி. சி. ஈ. உயர் தரம் பன்முறைத்தேர்வு வினுக்களும் விடைகளும் அமைவுக் கட்டுரை,குறுங்கட்டுரை, பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல் ஒவ்வொன்றும் ரூபா 19/40 தபாற் செலவு ரூபா 1/- யூனைட்டெட் இன்ஸ்ரியூட்ஸ் நெல்லியடி கரவெட்டி. 5671

## தவறிவிட்டது

788 கீரிமலை பஸ்ஸில் மூக்குக் கண்ணுடி கூட்டுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து மலாயன் கபேக்கு எதிரிலுள்ள ஸ்ரீமுருகன் ரெக்ஸ்ரைல்ஸிற் கொடுக்கவும். சன்மானம் உடனே வழங்கப்படும். 5680

K 868886 தொடர்பு இலக்க 6 கூப்பன்கள் பெரிய கடை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும்விலாசத்திற்கு அறியத்தருமாறு வேண்டுகிறோம். போதிய சன்மானம் வழங்கப்படும். வே. செல்லத்துரை,22, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம். 5679

## CLASSES

Architecture Katubedde University Architectonics for Fresher Taughts Unique opportunity. Course Commencing shortly. Apply early:- Advt. No. 5676, C/o Eela nadu, Jaffna. 5676

# இருண்ட இதயங்கள் !

ஆர். ஏ. ராஜா

அடிவானத்தில் தீப்பிழம்பாக வெடித்துச் சிதறிய செங்கதிர்கள் மங்கி மடிந்து முற்றாக மறைந்து கொண்டிருந்தன. பூதாகரமான கறுத்த முகில் மண்டலங்கள் மேலே வானில் திரண்டுகொண்டிருந்தன. குளிர்ந்த காற்றும் மெல்ல மெல்ல வீசத்தொடங்கியதும் மழை வருவதற்கான அறிகுறி தென்படத்தொடங்கியது. அந்தக் காய்கறித் தோட்டத்து மரம் செடிகள் ஒவ்வொன்றும் நிமிர்ந்து ஆடி அசையத் தொடங்கின.

செழித்து வளர்ந்த கத்தரிச் செடிகளுக்கருகில் தண்ணீரைப் பாய்ச்சக்கூடியதாக வாய்க்காலை மண்வெட்டியால் வெட்டிக்கொண்டிருந்த முருகன் மண்வெட்டியை கையில் பிடித்தபடி அண்ணாந்து வானத்தை நோக்கினான். அது இருண்டு போய்க் கிடந்தது. மழை வருவதற்கு அறிகுறியாக அது காணப்பட்டாலும் அவனுக்கு அது மகிழ்ச்சியைத் தரவில்லை. மாறாக அவனுக்கு அது அவனுடைய இதயத்தையே படம் பிடித்துக் காட்டுவதைப்போல் இருந்தது. ஏனெனில் அவன் இதயமும் அப்போது இருண்டு தான் கிடந்தது.

முதல்நாள் மாலை அவன் மனைவி மாரி கண்ணீருடன் கூறியவை அவன் மனதில் அலைமோதிக்கொண்டு வந்தது. "சீ என்ன கேவலமானவர்கள், இந்த ஊர் சனங்கள், ஊர் விசயங்களென்றால் வாய்க்கு அவல் கிடைத்த மாதிரி அவர்களுக்கு; வாழவிடாது இந்த ஊர், இல்லாத பொல்லாதவைகளை வைத்து கதைகட்டுவதில் இவர்களுக்கு ஒரு தனி இன்பம்".

ஊரார் பேசுவதைப் பொறுக்காமல் அவன் மனைவி மாரி கண்ணீர் விட்டது முருகனுக்கு அவன் இதயத்தை ஏர் கொண்டு உழுவதைப் போலிருந்தது. "ஊரார் என்ன பேசினாலும் பேசட்டும்" முருகன் சலித்துக்கொண்டான். ஆனால் நேற்றிரவு மாரி கேட்ட அந்தக் கேள்வி.... முருகனுக்கு அவன் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவதைப்போல் இருந்தது. ஒரு கணம் இவ்வளவுக்கும் காரணமான தன்னுடைய குழந்தையை தரையில் அறைந்து கொன்றுவிடலாமா என்றெண்ணினான். மறுகணம் அதன் தக்காளிப்பழ நிற மேனியும், துருதுருத்த கண்களும், கொவ்வைப்பழ இதழும், அவற்றில் உதிரும் மழலை மொழியும் அவனை ஒன்றும் செய்யவிடாமல் தடுத்தன. "ஊரென்ன சொன்னாலும் சொல்லட்டும்... அது என்ன செய்யும் பாவம் பச்சைக் குழந்தை" முருகனின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உருண்டன. முதல் நாள் மாலை நடந்த நிகழ்ச்சி முருகனின் மனக்கண் முன் தோன்றின.

தன் மழலையை அணைந்துக் கொஞ்சியபடி இருந்தான் முருகன். அவன் மடியில் அந்தக் குழந்தை இருந்த காட்சி அமாவாசையில் பூரண சந்திரன் உதித்ததைப்போல இருந்தது. அவனுடைய தடித்த கறுத்த மேனியில் தவழ்ந்தது அந்த மழலை. அவன் மட்டுமல்ல அவன் மனைவி மாரியும் தான் அழகி, ஆனாலும் சுத்தக் கறுப்பி. ஊரார் பேசுவதில் தவறென்ன? முருகனின் காதில் கேட்கும்படியாக அன்றைக்கு அந்த அடுத்த வீட்டுச் செல்லாத்தாள் பேசியது இன்னும் முருகனின் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. "செகப்பா பிள்ளை பெறுகிற கறுப்பு பத்தினிமார், இங்க இருக்கிறபடியால்தான் மரம்செடியெல்லாம் காய்ஞ்சிருக்கு.... மழையே பெய்யல்ல".

இதைக் கவனிக்காதவன் போலத்தான் அன்று முருகன் சென்றான். அவனுடைய மனத்திரையில் மாரியின் களங்கமில்லா முகம் மாறி மாறித் தோன்றியது. அது... "நான் களங்கமுள்ளவளா... நடத்தை கெட்டவளா..." எனக் கேட்பதைப் போலிருந்தது. முகத்தைப் பொத்தியபடி அழத்தொடங்கினான். முருகன் அவனின் விக்கல் சத்தம்கேட்டு வந்த மாரி திகைத்துப் போனாள். மெல்ல அவன் அருகில் போய் தன் நடுங்கும் கரத்தால் அவனைத் தொட்டாள். முருகனின் அழுகை நிற்கவில்லை. "மச்சான் நீங்களுமா என்னைச் சந்தேகிக்கிறீர்கள்?" மாரியின் கன்னங்கள் வழியாக கண்ணீர்த் துளிகள் உருண்டன. "இல்லை... மாரி... இந்த ஊரை நினைத்துத்தான்..." பேசமுடியாமல் விக்கினான் முருகன். அவன் அருகில் அவனோடு ஒட்டியபடி இருந்தாள் மாரி. அவள் கேசங்களை வருடி விட்டுக்கொண்டிருந்தான் முருகன். முருகனின் இதயக் குமுறல் அடங்கிக் கொண்டிருந்த போது... அவன் மனதிற்குள் எழுந்த போராட்டம், மெல்ல மெல்ல அடக்கிக் கொண்டு வந்தபோது... அப்போதுதான் மாரி அந்தக் கேள்வியைக் கேட்டாள். "ஏன் மச்சான் கறுப்பாய் இருக்கிறவர்களுக்கு ஒருக்காலும் செகப்பா வே பிள்ளை பிறக்காதா?"

முருகன் ஒருகணம்அதிர்ந்து போனான். அவன் அந்தக் கேள்வியைச் சற்றும் எதிர் பார்க்கவில்லை. அவனால் பேச முடியவில்லை வாயடைத்துப் போனான். "ஏன் மச்சான் பேசாமல் இருக்கிறீங்க அப்படீன்னா நான் ... நான்..." முருகன் அவளின் வாயைப் பொத்தினான்.' "இல்லை... இல்லை...நீ தங்கமானவள்... ம்...ஏன் பிறக்காது...பிறக்கும்!...ஆனா இதயத்தில் இருண்டு கிடக்கிறாங்களே அவங்களுக்குத்தான் ஒருக்காலும் உள்ளத்தில் ஒளி பிறக்காது. அதற்கு மேல் அவனால் பேசமுடியவில்லை. துண்டை உதறிப் போட்டபடி தரையிலே சாய்ந்து படுத்துக் கொண்டான்.

●

வானத்திலிருந்து சிறிது சிறிதாக தூறல்கள் விழ ஆரம்பித்தது. இடையில் கட்டியிருந்த சால்வையை எடுத்துக் கட்டிக் கொண்டான் முருகன். அவன் இதயம் கனத்துக்கொண்டிருந்தது. அவனுக்குத்தான் அந்தக் குழந்தை பற்றிய உண்மை தெரியும். உண்மையை எவ்வளவு நாளுக்குத்தான் மறைத்துவைப்பது. பொய்யைச் சொல்லி பெரிய உண்மை ஒன்றை மறைத்ததினால் அவன் மனைவியின் இதயம் எவ்வளவு துடிக்கிறதென்பது அவனுக்கு இப்போது புரிந்தது. இன்று எப்படியாயினும் மாரியிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டுமென்று தீர்மானித்தான் முருகன். அவனிடம் இப்பொழுதுதான் ஒரு புது உணர்ச்சி ஏற்பட்டது. அந்த உணர்ச்சி வேகத்தில் வீட்டை நோக்கி நடக்கலானான் முருகன்.

முற்றத்து மல்லிகைச் செடியின் கீழ் மண்பானையிலிருந்த நீரில் கைகால்களை அலம்பி விட்டு வீட்டிற்குள் நுழைந்தான் முருகன். அங்கு மாரியை காணவில்லை. உள்ளே ஏணையில் அவனுடைய மழலை உறங்கிக்கொண்டிருந்தது. 'மாரி தண்ணி அள்ளப் போயிருக்கும்' முருகன் தனக்குள் இப்படி நினைத்துக்கொண்டான்.

'இந்த மாரி தண்ணிக்குப் போனா நேரத்தோட வாரதில்ல' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு மூலையோரமாக குந்தி இருந்து வெத்திலையை வாய்க்குள் திணித்துக் கொண்டபோது குழந்தை அழத் தொடங்கியது, முருகன் எழுந்து சென்று குழந்தையை அப்படியே வாரித்தூக்கினான். அப்போது...அவனுடைய புருவங்கள் உயர்ந்தன, அந்த ஏணைக்குள் ஒரு வெள்ளைக் காகிதம் இருந்தது. பிள்ளையை ஒரு கையில் அணைத்தபடி மறு கையால் அதை எடுத்தான். அது...மாரி கைப்பட எழுதிய கடிதம். அவனுடைய கரங்கள் நடுங்கின. விழுந்துவிடுமோ என அஞ்சி குழந்தையை ஒரு கையால் இறுகப் பற்றிக் கொண்டு மறு கையால் கடிதத்தைப் பார்த்தான்...

அந்தக் கடிதம்...

மச்சான் என்னை மன்னிச்சிடுங்க மச்சான். எனக்கு என்ன எழுதுவதென்றே தெரியாது. ஆனாலும் சொல்லுகிறேன். நான்...உங்களை விட்டுப் போகிறேன்... அதற்காக என்னை மன்னிச்சிடுங்க. மச்சான் நீங்க என்னைக் கைப் பிடிச்சு இப்ப ஆறு வருடம் ஆகுதில்ல. இந்த ஆறு வருடமும் நாம எவ்வளவு சந்தோசமா இருந்திருப்போம், நாலு வருடமாகப் பிள்ளையே இல்லாமஇருந்தேன். அது ஒண்ணுதான் எனக்குக் கவலையாய் இருந்திச்சு. ஆனா அந்த மகமாயி துணைபுரிஞ்சு நான் கர்ப்பமாயிட்டேன்—நான்கு வருடத்திற்குப் பிறகு அப்போ நான் எவ்வளவு சந்தோசப்பட்டேன் தெரியுமா...நான் தாய்மை அடைஞ்சதில எவ்வளவு மகிழ்ச்சி எனக்கு. கர்ப்பம்தாங்கிப் பத்தாவது மாதத்தில் என்னைப் பட்டணத்திலே கொண்டுபோய் பெரியாஸ்பத்திரியில் விட்டீங்க. அப்போது எனக்கிருந்த மகிழ்ச்சி என் வலியையும் மறைச்சிடுச்சு. என்னை அடுத்துயார் யாரோ நின்றுங்க எனக்கு ஒன்னுமே தெரியல்ல. நான் மயங்கிட்டேன். அப்புறம் விழித்துப் பார்த்தப்போ என் அருகில்...மச்சான் நாம சின்ன வயதில நிலவின் கீழ் இருந்து விளையாடுவோமே அது வேணும் வேணும் என்று நான் அடம் பிடிப்பேனே அந்த நிலவே என் அருகில் கிடந்ததைப் போல் இருந்திச்சு. எங்க கிராமத்திலேயே இப்படிச் செவந்த பிள்ளை இல்ல என்ன மச்சான்! அந்த நேரம் நான் நினைத்துக் கொண்டேன் எங்க ஜனங்கள் எவ்வளவு பொறுமைப்படு வாங்க என்று. அப்போ நீங்க என் அருகிலேயே நின்றீங்க. நான் உங்களைப் பார்த்துச் சிரிச்சேன். நீங்களும் சிரிச்சீங்க. ஆனா உங்க கண்ணிலே இருந்து கண்ணீர் வந்தது. அது ஆனந்தக் கண்ணீர் எனக்குத் தெரியும். என்னைவிட எவ்வளவு மகிழ்ச்சி உங்களுக்கென்று. குழந்தையோடு எவ்வளவு அன்பாகக் கொஞ்சி விளையாடுவீங்க. எங்க ஊரிலே எல்லாரும் குழந்தையைப் பார்த்துப் பொறுமைப்படு வாங்க என்றாலும் என்னைப் பார்த்துப் பெருமைப்படு வாங்க என்று நினைச்சேன். ஆனா குழந்தையைப் பார்த்தவர்கள் எல்லாரும் என்னை ஏதோ ஒரு மாதிரியாப் பார்த்தாங்க மச்சான். அந்தப் பார்வை என்னை என்னவெல்லாமோ பண்ணிடிச்சு. ஆரம்பத்தில் என்னவெல்லாமோ பேசினாங்க. எனக்கு ஒண்ணுமே புரியல்ல. அப்புறம்தான் மச்சான் எல்லாமே தெரிஞ்சிது. நாம ரெண்டு பேருமே கறுப்பாம். இந்தக் குழந்தைக்கு தகப்பன் நீங்க இல்லையாம். நான் கெட்டவளாம். மறைச்சு மறைச்சு கதைச்சவங்க எல்லாம் நேராவே சொல்லுறாங்க. ஏன் மச்சான் உங்களுக்கு தெரியுமில்ல இது வரை நான் யாரையாவது நிமிர்ந்துகூடப் பார்த்திருக்கிறேனா! சொல்லுங்க மச்சான். என்னால எப்படி வாழமுடியும். ஏதாவது ஆத்தில குளத்தில விழுந்து செத்துப்போயிடுறன். என் மழலையுடன் மகிழும் பாக்கியம் எனக்கில்லை. மச்சான் நீங்க மட்டும் என்னைத் தப்பா எண்ணாம இருந்தா போதும். என்னை மன்னிச்சிடுங்க, உங்க மனைவி மாரி.

கறுத்த முகில் மண்டலங்களைக் கிழித்துக்கொண்டுவந்த மின்னற் கீற்றுக்கள் பளிச் பளிச் என்று எங்கும் பட்டுச் சிதறின. வானமே இடிந்துவிழுவதைப் போன்ற இடியோசை அந்தக் கிராமமே அதிரும் படியாக இருந்தது. ஓ...என்ற பயங்கரச் சூறுவளிக் காற்று பேய் இரைச்சலுடன் வீசியது.

இடி... மின்னல்..., இடி... மின்னல்...

மாரி...!...!...! முருகனின் வாயில் இருந்து வெளிப்பட்ட இந்த அலறல் இடி ஓசையிலும் மேலாக அந்தச் சூறுவளிக் காற்றுடன் சேர்ந்து எங்கும் எதிரொலித்தது.

"மாரி! அவசரப்பட்டுவிட்டாயே. உண்மையைச் சொல்லத்தான் நான் ஓடிவந்தேன். அதற்கிடையில் என்னை உதறிவிட்டுச் சென்றுவிட்டாயே. நான் பாவி... ஊரென்ன பேசினாலும் பேசட்டும். உண்மை எனக்குத்தெரியும். அந்த ஆண்டவக்குத்தெரியும். ஆனால் உனக்குத் தெரியவில்லையே மாரி. மாரி அந்த உண்மையை...அது...நீநான்கு வருடமா தாய்மை அடையாமல் இருந்தாய். அப்போது உனக்கிருந்த ஏக்கம் எனக்குத் நன்கு புரிந்தது. பெண்மையின் முழுமையே தாய்மையில்தான் என்பதை நானறிவேன். தாய்மை நிலையை எண்ணி ஏங்கும் உன் உள்ளத்து உணர்வுகள்...என்னை உறுத்திக் கொண்டிருந்தது. நான் என்ன செய்வேன். இறைவனைநொந்து கொண்டேன். ஒருவேளை உனக்குப் பிள்ளைப் பாக்கியமே கிடையாதோ வாழ்நாள் முழுவதும் இப்படியேஇருப்பாயோ என எண்ணினேன். ஆனால் அந்த இறைவன் எம்மைக் கைவிடவில்லை. நான்கு வருடத்தின் பின் நீ கர்ப்பம்தரித்தாய். அப்பாடா அந்நேரம் உனக்கிருந்த மகிழ்ச்சி...எனக்கிருந்த மகிழ்ச்சி...ஆனால்அந்த மகிழ்ச்சி எல்லாம் நீ பிள்ளையைப் பிரசவித்தஅன்றுமடிந்து மண்ணோடு போயிற்று. உண்மை மாரி. அன்று நீ பெத்த பிள்ளை பிறக்கும் போது ... பிறக்குப்போதே இறந்துதான் பிறந்தது மாரி, மாரி! இதை நீ அறிந்தால் நான்கு வருடமாகப் பிள்ளைப் பாக்கியத்திற்காக ஏங்கிய நீ துடிதுடித்துச் செத்துப் போய்விடுவாய் என்றெண்ணி அந்த ஆஸ்பத்திரியிலே அப்போதுதான் பிறந்து தன் ஏழைத் தாயை இழந்த அனாதையாகியகுழந்தையைவாங்கி நீ மயக்கம் தெளியுமுன்னே உன் அருகில் வைக்கச்சொல்லி உன் பிள்ளையாக்கினேன். நான் பாவி...மாரி... நான் பாவி.

"இல்லை...உன்னை நான் சாக விடமாட்டேன்... நீ என்னை விட்டுப்போக நான் விடமாட்டேன்." வெறிபிடித்தவன் போல் கத்தியபடி ஒரு கையில் குழந்தையை ஏந்தியவண்ணம் வீட்டு வாசலில் காலடி எடுத்து வைத்தான் முருகன். அதுவரையில் தூறலாகிக்கொண்டிருந்த மழை பேரிரைச்சலுடன் சோவெனப் பெய்யத் தொடங்கியது. இடிமின்னல் சேர்ந்த மழை. சூறுவளி மழை. பிரளய காலத்தின் கற்பனையைக் கண்

(9-ம் பக்கம் பார்க்க)



## புதிதாக எழுதுபவர்களுக்கு

தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுங்கள். சுவையான கட்டுரைகளை சுருக்கமாக எழுதுங்கள். 'போர்' அடிக்கும் கட்டுரைகள் வேண்டாம். சிறுகதைகளும் 'சிறு' கதைகளாகவே இருக்கட்டும். திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலையும் சொந்த முகவரியிட்ட கடித உறையும்அனுப்புங்கள். ஆ—ர்.

## கழுதையுங் கல்லூரியும்!

கழுதைக்குங் கல்விக்குமுறவென்ன உறவு
கல்லூரி வளவிற்குள் ளிதற்கென்ன தொடர்பு
புழுதிக்குங் கழுதைக்குமுறவுண்டு கண்டீர்
புத்திக்கு உவமித்த பொருத்தங்களென்ன
பொதிகட்குங் கழுதையின் முதுகிற்கும் பொருத்தம்
பொடிப்பிள்ளை கழுதைக்கு எதற்காகி வந்தார்
அபயத்தின் குரல்கொண்டு அயராது கத்துமவ்
வளவிற்குப் பிள்ளைகள் ஆர்ப்பரிப்புளதா
காலினால் விண்ணென்று கரவாதடிக்குமக்
காரணங்கொள்பிள்ளை கலைமன்றிலுண்டா
இலட்சணத் தோற்றமோ எள்ளளவுமில்லை
இதனையே யொத்ததா விளையோரின் கூட்டம்
குதிரைக்குங் கழுதைக்கும் பொருத்தங்களுண்டு
குட்டிப் பயல்கட்கு குதிரை நேரில்லை
மடையர்க்குங் கழுதைக்குமுறவென்ன சொல்லும்
மனிதனின் மடைமைக்குக் கழுதையா பொறுப்பு
ஆயிரம் வகையான பேர்கொண்ட கழுதை
அன்றாட வேலையுட னருகே வருந்தான்
சீற்றங்கள் கொண்டதும் ஏட்டிற்கு முன்னால்
செப்பியேயாசிரியர் சினத்தோடமர்வர்
நேரமுங் காலமும் நிலைகொண்டவிடமும்
நேரிடுந் துன்பங்கள் நோவுமேயறியார்
பேசிடும் போதினில் யாருக்கு வெட்கம்
பிள்ளையுங் கழுதையும் பிழைகாரரில்லை.

—எழினி சீ. சிவநாதபிள்ளை




# இந்திய தேசிய எழுச்சிக்கு வித்திட்ட வந்தேமாதர கீதம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மேற்றிசை நாகரிகம் யாவற்றையும் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுபவர்களை பங்கிங் சந்திரரின் தேசாபிமானஉணர்ச்சி வெறுக்கச்செய்தது. அதே சமயம் ஆங்கில நாகரிகத்தையும் ஓரளவு வரவேற்ருர், மேற்கு நாடுகளின் தொடர்பினுல் இந்தியா விஞ்ஞானஅறிவியலிலும் நாகரிகத்திலும் முன்னேறிச் சிறப்பை அடையும் என அவர் நம்பினுர். அவருடைய காலத்து ஏனைய சில சிந்தனையாளரைப்போல பிரித்தானியரின் தொடர்பு மேலும் சில காலத்திற்கு அவசியமென அவர் நம்பினுர். ஆனந்தமடம் நாவலின் இறுதி அதிகாரத்தில் ''விதியினுல் எம்மை ஆளும்படி நியமிக்கப்பட்ட ஆங்கிலேயரிடம் போதிய ஆங்கிலத்தைக் கற்று அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும்' என இளஞ் சந்ததியினர்க்கு புத்தி கூறியுள்ளார்.

இதுதான் பங்கிங் சந்திரரின் திடமான நம்பிக்கை என்று சொல்ல முடியாது. பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தைஅவமதித்தசுதந்திர வீரர்கள் ஆனந்த மடம் எனும் நாவலில் இருந்தே உதாரணங்களை எடுத்துக்காட்டினுர்கள். ஆனந்தமடம் நாவல்தான் வங்காளிகள் புரட்சியின் உச்ச நிலையடையத் தூண்டியது. ரௌலற்சபை 1918-ம் ஆண்டு தமது அறிக்கையில் 'ஆனந்த மடம்' என்னும் நாவல்தான் மக்களிடையே புரட்சி எண்ணத்தைத் தூண்டியுள்ளது. வந்தே மாதரம் முன் காணப்படாததும் வருங்காலத்திற்கூட காணமுடியாத தேசிய உணர்ச்சியைப் பரப்பியுள்ளது' எனக் குறிப்பிட்டுள்ளது.

## கீதத்தின் சக்தி

அரவிந்தரின் கருத்துப்படி வந்தே மாதரம் தமது கடமையைச் செய்ய அழைக்கும் ஒரு பேரிகை ஒலியாகும். ஆனந்த மடம் அந்த நோக்கத்திற்காகவே எழுதப்பட்டது. முதலிலே எழுதப்பட்ட வந்தே மாதர கீதத்தின் விளக்கமாகவே பின் ஆனந்தமடம் நாவல் எழுதப்பெற்றது. பங்கிங் சந்திரர் ஆசிரியராக இருந்த 'வங்கதரிசன்' என்னும் பத்திரிகைக்காக வந்தேமாதர கீதம் எழுதப்பெற்றது. அப்போ அதன் அதிபர் பத்திரிகையின் பக்கங்களை நிரப்ப இந்த ஒரு பாட்டுக் காணுது ஒரு நாவலே எழுதும்படி கூறினுர். அப்போது அவர் அந்த அதிபரை நோக்கி 'இந்தக் கீதத்தின் சக்தியை இப்போ உணரமுடியாது. (மேலும் 25 வருடங்கள் சீவித்திருந்தால் இதன் சக்தியை உணரலாம். வங்காளதேசம் இதைக் குறித்துப் பேரானந்தம் அடையும்'' என்று கூறினுர். பங்கிங் சந்திரர்க்கிருந்த மன உறுதியும், வருதேவ சக்தியுமே அவரை இவ்வாறு தீர்க்கதரிசனம் கூறும்படி செய்ததெனலாம். வங்காளம் மாத்திரமல்ல, அகில இந்தியாவுமே தேசீய கீதமாய் ஏற்றதையும், வந்தே மாதர கீதத்தின் முதல் சொற்கள் சிவாஜியின் ஞாபகமாடத்தில் பொறிக்கப்பட்டதை காணும் வரையும் அந்த அதிபர் சீவித்தார்.

1896-ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் 11-ம் ஆண்டு விழா கல்கத்தாவில் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில்தான் வந்தே மாதரம் முதன் முதல் பாடப்பட்டது. கவி ரவீந்திரரால் இசையமைக்கப்பட்ட இப்பாடல் மற்ருேர் புலவரால் சபையில் பாடப்பட்டது. சபையோர் அக்கீதத்தால் கவரப்பட்டு அமைதியாக அதைக் கேட்டனர். காங்கிரஸ் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராகிய மேத்தா அதனை ஒலிப்பதிவு செய்தார். அவருக்கு அப்போது பட மொழியோ அல்லது கீதம் பாடப்பட்ட வங்காள மொழியோ தெரியாது. ஆனுல் அந்தக் கீதத்தைப் புலவர் பாடக்கேட்ட பொழுது அவர் மனம் உயரத்தில் சஞ்சரிப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. மற்றைய மாகாணங்களில் இருந்து வந்தவர்கள் அந்தக் கீதத்தின் சரியான கருத்தை அறிய விரும்பினுர்கள். ராஸ்டிரகுரு சுரேந்திர நாத் இதற்கு விளக்கம் கொடுத்தார்.

''சிறந்த சிந்தனைகள் இருதயத்திலிருந்து ஊற்றெடுக்கின்றன. இருதயத்திற்கூடாக அவை மூளையைச் சுற்றி வேலை செய்கின்றன, பங்கிங் சந்திரர் இந்தக் கீதத்தை பாடிய பொழுது இந்த நிலையே இருந்திருக்கவேண்டும். தாய் நாட்டின் எதிர்காலம் அவர் மனதில் தோன்றியது. அந்தத் தோற்றமே சிறந்தசெய்யுளாக உருவெடுத்தது. அந்தக் கீதத்தின் ஓசை எங்கள் இதயத்தை நிறைத்து எங்கள் தாய்நாட்டின்முன் தலைவணங்கச் செய்கிறது. அது ஒரு அர்த்தமுள்ள உணர்ச்சியை உண்டாக்கி மக்களின் மனதை விழுங்கி தேசிய உணர்ச்சியில் யாவரையும் ஒன்றுபடுத்துகிறது. அமைதியான சிறந்த சக்தி கீதத்தின் ஒவ்வொரு சொல்லிலும் ஊடுருவி நிற்கின்றது. வந்தே மாதரம் ஒரு சாதாரண கீதமல்ல. அது ஒரு தேவகீதம். இந்தக் கீதம் இந்திய அரசியலில் ஒரு பிரதான இடத்தைப் பெறப்போகும் நாள் அதிகதூரத்தில் இல்லை'' என அவர் கூறினுர்.

## யுத்த பேரிகை

எவ்வாருயினும் 1906-ம் ஆண்டுவரைக்கும் வந்தே மாதரம் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அந்த ஆண்டில் தேசிய காங்கிரசின் வருடாந்தக் கூட்டம் காசியில் கூடியது. கோபால கிருஷ்ண கோகலே தலைமைதாங்கினுர். சகோதரி நிவேதிதா வந்தே மாதர கீதத்தை கூட்ட ஆரம்பத்தில் பாடவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். அவரின் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ரவீந்தரரின் பெருமகள் முறையான சாரதாதேவி சௌதாரினி என்பவரால் வந்தே மாதர கீதம் பாடப்பட்டது. அதன் பின்பு தேசிய காங்கிரஸ் கூட்ட ஆரம்பத்தில் இக்கீதம் இசைப்பது வழமை ஆயிற்று.

காந்திஜியின் தலைமையில் வந்தே மாதரம் ஒரு யுத்த பேரிகையாக மாற்றப்பெற்றது. காந்திஜி இந்தக் கீதத்தை மிகவும் நேசித்தார். அவர் ஒரு முறை தாகூருக்கு எழுதிய கடிதத்தில் ''வந்தே மாதர கீதம் இந்தியாவின் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்'' எனக் குறிப்பிட்டிருந்தார்,

பங்கிங் சந்திரரின் தேசாபிமான நோக்கு தெளிவாக இந்தக் கீதத்தில் பிரதிபலிக்கிறது. அதுதான் அவரை இறவாத புகழுடையவராக்கியது. அவர் வங்காள நாகரிகத்தை நன்கு உணர்ந்திருந்தாலும் அவரின் தேசிய நோக்கு விசாலம் அடைந்திருந்தது. அத் தேசிய கீதம் இந்திய உபகண்டத்திலுள்ள முஸ்லிம், இந்து இனத்தவர்களை ஒன்றிணைப்பதாகவே உள்ளது. ஆரம்பத்தில் இந்துமத சார்புடையது என அக்கீதம் கருதப்பட்டாலும், பயங்கர வகுப்புவாதம் புனிதமுடைய தேசிய கீதத்தின் முன் நிற்கமுடியவில்லை. ரவீந்திரருடைய 'ஜன, கண, மண' என்ற கீதத்துடன் இதுவும் தேசீய கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஸ்ரீ அரவிந்தர் வந்தே மாதர கீதத்தை ஆதரித்துத் தமது பத்திரிகையில் பல கட்டுரைகளை வரைந்துள்ளார். அவை 'வந்தே மாதரம்' என்னும் புத்தகமாக மாக வெளிவந்துள்ளது,

இன்று வந்தே மாதர கீதம் எழுந்து நூறு ஆண்டுகளாகிவிட்டன. நாம் சென்ற காலத்தைத் திரும்பிப் பார்க்கும் பொழுது சொல்லால் விபரிக்க முடியாத ஓர் உணர்ச்சியை அடைகிறேம்.

மோனிக் பக்சி: தமிழ்: வ·குகசர்மா

* * *

## நான்கு நாட்கள்

புலவர் ம. பார்வதிநாதசிவம்

எண்ணிய யாவும் சொற்களிற் சொல்ல
இன்னும் அறியா என்னுயிர்ப் பாலகன்
கையை அசைத்தும் கனிக் குரல் கொண்டு
ஐய எனக்கோர் பொம்மை கடையினில்
வாங்கி வருக எனுமோர் கருத்தைத்
தயங்கித் தயங்கிப் புலப் படுத்தலும் நான்
கடைபல நாடிநடை மிகப் புரிந்தே
ஈற்றில் பொம்மையை இனிதினில் வாங்கி
என்மகன் கையினிற் சேர்த்தலும் மனைவியோ
விலையினைக் கேட்டே சிலையென மாறிச்
சிறிது நேரம் சென்றதன் பின்னர்
''நான்கு நாட்களில் அழிந்திடும் பொம்மையை
ஏன் வீண்விலைக்கே வாங்கினீர்'' என்றனள்
இக்கணம்தானே மறுகணம்தானே எக்கணம்தானே
அழிந்திடும் உடம்பை
வீணென நினையாது பேணிடும் மனைவி
பொம்மையை நான்குநாட் பொழுதெனக் கூறிய
அம்மொழி கேட்டே அகத்தே நகைத்தனன்.

* * *

கலையுலகத் தொடர்புகள்-

# எம். ஜி. ஆர்.-ச… திறந்த காரில் கொழும்பில் பவ…

வழமையான விமானத்தில் எம். ஜி. ஆர். குழுவினர் வந்தமையால் முதலில் மற்றப் பிரயாணிகள் இறங்கினுர்கள். அவர்கள் இறங்கி சுங்கப் பகுதியை அடைந்த பின் எம். ஜி. ஆர். தோற்றமளித்தார்.

எனக்கும் மற்றும் வரவேற்புக் குழுவினருக்கும் ஏதோ ஒரு பாரம் குறைந்ததுபோல் இருந்தது. ஜனங்களின் ஆரவாரம் கட்டுக்கடங்கவில்லை.

மூட்டும் என்று அவர்க… கும் பக்கமெல்லாம் … போகத் தொடங்கிவி… இதனுல் பொலிஸ்கா… இவருக்கு பாதுகாப்… மெய்க்காப்பாளராக … களுக்கும் பெரும் … மாகிவிட்டது. ஒரு … இதைக்குறைத்து விப… யத்திற்குள் அழைத்… றுவிட்டோம்.

எஸ். பி. மயில்வாகனன்

இரத்மலானை விமான நிலையத்தில் எங்கு இடமுண்டோ அங்கெல்லாம் ஜனக்கூட்டம். எம். ஜி. ஆர். ரசிகர்களின் போக்கை நன்கு அறிந்தவர். அவர்களால்தான் நடிகனே, நடிகையோ முன்னுக்கு வர முடியும் என்பதை அறிந்தவர். ரசிகர் அருகில் வாருங்கள் என்ருல் அவர்களை அணுகி அரவணைத்துப் பேசுபவர். அதனுல் இந்த மாபெரும் ஜனத்திரளைக் கண்டதும் அவர்கள் தன்னையும், சரோஜாதேவியையும் நன்ருகப் பார்த்து மகி…

### அன்புத்தொல்லை…

விமான நிலைய… ளும் விசேஷ உத்தர… வந்தவர்கள்எண்ணிக்… கிவிட்டது. எல்லே… எம். ஜி. ஆரை … பார்க்கவேண்டும், … டும். முடியுமானுல் … நின்று படமெடுத்துக்… வேண்டும் என்று ஆ… ஜி. ஆருடன் ச… தேவியுமல்லவா பி… களுக்கு இதைவிட … என்ன இருக்கமுடியு…

* * *

நான் இப்படித்தான் இந்தியா சென்றேன

# தமிழ்நாட்டில் தி. மு. க. வை அசைக்க முடியாதென்ருர் ஒருவர்

இந்தியா பற்றி விதம் விதமான கற்பனைகள் வைத்திருந்த எனக்கு திருச்சிவிமான நிலையத்திலிருந்து காரில் சென்றுகொண்டிருந்த போது கண்ட காட்சிகள் ஏமாற்றத்தையே தந்தன! பனைமரம் உட்பட நான் யாழ்ப்பாணத்தில் சர்வசாதாரணமாகக் காணும் காட்சிகளைத் தான் அங்கும் கண்டேன்.

கார் விரைந்துகொண்டிருந்தபோது வீதிகளில் கண்ட குறிப்பிடத்தக்க காட்சி-பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் உருவப்படத்தைத் தாங்கிய பிரமாண்டமான போஸ்டர்கள்! பல வர்ணங்களில் நிறமூட்டப்பட்டு சந்திகளில் மாட்டப்பட்டுள்ளன. அதில் நில உச்சவரம்பு, வீடில்லாப் பிரச்னை, நிலமற்றவர்களுக்குக் காணிப் பங்கீடு போன்ற நவபாரதத்தின் இருபது அம்சத் திட்டங்கள் பற்றிய விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. அங்கு செல்லும் எவரும் இந்திராவின் இந்த இருபது அம்சத்திட்டப் பிரசாரப் போஸ்டர்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. எங்கும் இதே மயம்!

எமது கார் திருச்சி அசோகா பவனைச் சென்றடைந்ததும் நானும் மனைவியும் காரிலிருந்து இறங்கியதும் சாரதி 6 ரூபா கேட்டார். ஒரு போத்தல் தேங்காய் எண்ணையைக் கொடுத்தோம். மிகச் சந்தோஷத்துடன் அதனை அவர் பெற்றுக்கொண்டார்.

31-ம் அறையில் எமது பொருட்களை வைத்துவிட்டு வெளியே வந்தபோது பக்கத்து அறை வாசலிலிருந்து வந்த 'ஹலோ' என்ற திடீர் குரல் என்னை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

இவரை எனக்கு யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்திய பெருமை, பிரயாணத் திகதியை இழுத்தடித்து வீட்டுக்கும் விமானக் கந்தோருக்குமாக 'ஓட்டப்பந்தையம், செய்ய வைத்த 'ஏயர் சிலோனுக்'கே உரியது. நான் விமானக் கந்தோருக்கு 'பறந்து' திரிந்த சமயங்களில் எல்லாம் இந்த அன்பரும் தனக்கென ஓர் ஆசனம் தேடிஓடிக்கொண்டிருந்ததினுல் ஒரு பரஸ்பர நட்பும் பரிதாப உணர்வும் ஏற்பட்டிருந்தது.

எஸ். கே. காசி

வாழைச்சேனை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் இளைஞரான எஸ். ரி. சிவலிங்கம் மட்டக்களப்பு வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நான்கு வருடங்களுக்கு முன்னரும் ஒரு தடவை இந்தியா வந்ததாகச் சொன்னுர். அதாவது எம்மிலும் பார்க்க இந்தியாவில் 'அனுபவசாலி!'

அவரும் எம்மைப் போல் ஜனவரி 5-ம் திகதி சிதம்பரத்தில் ஆருத்திரா தரிசனம் செய்துவிட்டு சென்னைக்குச் செல்லும் வழியில் சில ஸ்தலங்களைத் தரிசிக்கத்திட்டமிட்டிருந்தார். இவருடன் சேர்ந்து பயணத்தைத் தொடரலாம் என என் மனம் சொன்னது!

திருச்சி வந்தடைந்ததுபற்றி ஊருக்குத் தந்தி கொடுப்பதென முடிவுசெய்துகொண்டு நானும் மனைவியும் நண்பர் சிவாவும் புறப்பட்டோம். ஹோட்டல் 'ரிசப்ஷனை' நோக்கி நடந்த போது ஒரு குரல்-'சார்! உங்களை யாரோ டெலிபோனில்விசாரிச்சாங்க' 31-ம் அறையில் தங்கிட்டிருக்காங்கனு சொன்னேம்' என்றது அந்தக் குரல்!

நான் இங்கு வந்துள்ளது பற்றி இந்தியாவில் யாருக்குமே தெரியாதே! என்ன ஆச்சரியம், என்று திகைப்பதற்குள் திருச்சி விமானநிலையத்தில் எனது இந்திய நடமாட்டம் பற்றி விபரம் கேட்டிருந்த அதிகாரியின் ஞாபகம் வந்தது. நடைமுறைச்சம்பிரதாயத்துக்காகத்தான் பத்திரிகையாளன் என்ற வகையில் எனது நடமாட்ட விபரங்கள் கேட்கப் படுவதாக நான் நினைத்திருந்தேன். ஆனுல் அங்கு எவ…

…வளவு துரிதமாகச் … கிருர்கள் என்பதை… தும் மனதில் ஒருவி… இலங்கையில் ஆ… 'கெடுபிடி' இந்தி… வந்திறங்கியும் … பாடில்லை. இந்தக்… இப்படியே … என்று அங்கலா… தொடர்ந்தோம்.

ஹோட்டலைவிட்டு… வந்த போது ஒருவ… பட்டியலை எமக்கு … 'உங்ககிட்டே ச… இருந்தால் இந்த … எடுப்போம்' என்… யாக நம்மை 'பிளி… இழுத்தார். அங்கு… இலங்கையரிடமும் … துண்டுகளை அவர் … கொண்டே இருந்த…

'கொஞ்சம் பொ… மாக வந்து சேர்ந்தே… ஊருக்குத் தந்திய… வருகிறேம்' என்று … அவரைக்'கழற்றி'வி… தோம்.

திருச்சியிலிருந்து … கிலோ மீட்டர் … 'மெயின் கார்ட் கே… இடம் இருக்கிறது… யின் முக்கிய விய… யம் இதுதான்! … டைப் பிள்ளையார் … இங்குதான் இருக்கி… உச்சியில் அமைந்த… கோவிலிலிருந்து … திருச்சிநகரத்தின் … தெரிகிறது. பிள்… தரிசித்துவிட்டு இ…

## ...டர்புகள் — 14

# ...ஆர்.-சரோஜாதேவி ...ரில் ...ல்பவனி

...ரும் என்று அவர்கள் இருக்
... பக்கமெல்லாம்' நடந்து
...கத் தொடங்கிவிட்டார்.
...னல் பொலிஸ்காரருக்கும்
...ருக்கு பாதுகாப்பாகவும்.
...க்காப்பாளராக வந்தவர்
...க்கும் பெரும் சங்கட
...விட்டது. ஒருவிதமாக
...தக்குறைத்து விமானநிலை
...திற்குள் அழைத்துச்சென்
...ட்டோம்.

...வாகனன்

### ...ன்புத்தொல்லை

...விமான நிலையத்திற்குள்
... விசேஷ உத்தரவு பெற்று
...தவர்களெண்ணிக்கைபெரு
...விட்டது. எல்லோருக்கும்
... ஜி. ஆரை தொட்டுப்
...ர்க்கவேண்டும், பேசவேண்
... முடியுமானல் அருகில்
...ன்று படமெடுத்துக்கொள்ள
...ண்டும் என்று ஆவல். எம்.
... ஆருடன் சரோஜா
...தேவியுமல்லவா பின்பு ரசிகர்
...ருக்கு இதைவிட ஆனந்தம்
...ன இருக்கமுடியும்! இந்த அன்புத் தொல்லைகளிலிருந்து எம். ஜி, ஆரையும் சரோஜா தேவியையும் காப்பாற்றுவதற்கு பெரும் பிரயத்தனமாயிற்று. எம். ஜி. ஆருக்கு இலங்கையில் தமிழ் ரசிகர்கள் மட்டுமா, இல்லையே சிங்கள ரசிகர்கள்தான் அதிகம். ஆகையால் இலங்கை ரசிகர்களுக்குள்ளாக எம். ஜி. ஆர். சரோஜாதேவியை வெளியே கொண்டுவந்து காரில் ஏற்றுவது இலேசான காரியமல்ல. ஆனல் எப்படி செய்துமுடிக்க வேண்டும், எந்தக் காரில் ஏற்றுவது அவரை என்ற பிரசனை வேறு. அவரை வரவழைத்த பத்திரிகை நிறுவனம் எத்தனையோ கார்களை கொண்டுவந்திருந்தார்கள்.



'கட்டபொம்மன்' திரைப்படம் வெளியானதையடுத்து மக்கள் திலகம் எம். ஜி. இராமச்சந்திரன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், டைரக்டர் பந்துலு மற்றும் நடிகர் நடிகையர் பிரமுகர்களுக்கு வரவேற்பு அளித்து மகிழ்ந்தார்.

ஆனல் எம். ஜி. ஆர். தனது நண்பர் ஒருவரின் காரில்தான் வருவேன் என்று கூறிவிட்டார். அது பெரிய கார்தான். எம். ஜி. ஆர் உள்ளுக்குள் உட்கார்ந்துவிட்டால் வெளியில் நிற்பவர்களுக்கு அவரைத் தெரியாது. அந்தக் காரில் எம். ஜி, ஆர். சரோஜாதேவியுடன் அமர்ந்துகொண்டார். இரத்மலானையிலிருந்துஹோட்டல் போகும்வரை தெரு இருமருங்கிலும் ரசிகர்கூட்டம். எம் ஜி, ஆர். தனனால்இயன்ற வரை தலையை வெளியில் காட்டி அவருடைய வழமையான புன்முறுவலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டே வந்தார்.

### திரும்பிவர உத்தரவு

இரத்மலானையிலிருந்து புறப்பட்டு வெள்ளவத்தை வந்திருக்கமாட்டோம். எங்களை திரும்பி விமானநிலையத்திற்கு வரும்படி தகவல் கொடுக்கப்பட்டது. யாரோ விளையாடுகிருர்கள் என்று எண்ணி நாங்கள் தொடர்ந்து போய்க் கொண்டே இருந்தோம். ஆனல் உண்மையில் நாங்கள் திரும்பிப்போக வேண்டியதாயிற்று. ரசிகர்களிடமிருந்து தப்பிவர எத்தனித்த சமயத்தில் குடிவரவு காரியாலத்தில் கையெழுத்துப் போடாமல் வந்துவிட்டோம். அதற்காகவே நாங்கள் மீண்டும் திரும்பி விமான நிலையம் போய் கையெழுத்துப்போட வேண்டியதாயிற்று. நல்லவேளையாக நாங்கள் திரும்பிச் சென்றபோழுது ரசிகர்கள்கலைந்துவிட்டார்கள். ஆனல் எம். ஜி. ஆர். தங்கும் ஹோட்டல் எது என்பதை அறிந்திருந்த ரசிகர்கள் அங்கு குழுமிவிட்டார்கள். எம், ஜி. ஆர். குழுவினர்கள் காலிமுகத்திடலிலுள்ள ஹோட்டலில் தங்குவதற்குத்தான் ஒழுங்காகி இருந்தது. ரசிகர்கள் அங்கு குழுமியிருந்தாலும் ஹோட்டலுக்குள் சிரமமின்றி சென்றுவிட்டோம்.

### எதிரும் புதிருமான அறைகள்

ஹோட்டலுக்குள் போனதும் எம். ஜி. ஆர். தங்கும் அறைக்கு நேரே அழைத்துச் சென்ருர்கள். எம். ஜி-ஆருக்கு நல்ல வசதியான அறை. அதற்கு நேராகவுள்ள அறையும் அவருடைய அறையைப் போன்றது. இந்த இரண்டு அறைகளும் ஒரு ஒதுக்கமாக இருந்தமையால் எம, ஜி.ஆர். அந்த 'அறையில் சரோஜா தேவி தங்கலாமே? என்ருர்.

ஆனல் எம். ஜி. ஆரை வரவழைத்தவர்கள் அடுத்தடுத்த அறைகளைத்தான் ஒழுங்கு செய்திருந்தார்கள். இதனல் அவர் அறைக்கு நேராக இருந்த அறையை ஹோட்டல்காரர்கள் வேறு யாருக்கோ கொடுத்துவிட்டார்கள். அவர்களை உடனே அகற்றுவது முடியாத காரியமாயிற்று. இதனல் எம். ஜி. ஆர். அன்று மட்டும் அந்த அறையில் தங்கினர். அடுத்த நாள் வேறு. அதுவும் சற்றுத்தொலைவில். ஆனல் அதே மாடியிலுள்ள அறைக்கு மாறிவிட்டார். எம். ஜி. ஆர்; ஹோட்டலில் தங்கியிருந்த சமயத்தில் அவருக்குத் தினமும் பிரபல நகை வியாபாரி ஒருவர் வீட்டிலிருந்துதான் சாப்பாடு வந்தது. அவரின் காரில்தான் எம், ஜி. ஆர். பிரயாணம் செய்தார். எம். ஜி. ஆர். வந்திறங்கிய அன்றே அவர் தன்னை வரவழைத்த பத்திரிகை நிறுவனத்திற்கு விஜயம் செய்தார்.

### திறந்த காரில் பவனி

அவரை ஹோட்டலிலிருந்து பத்திரிகை நிறுவனத்திற்கு அழைத்துச் செல்லவந்திருந்தவர் அந்தப் பத்திரிகை நிறுவனத்தில் நிர்வாக ஆசிரியராக விருந்தவரின் புத்திரர் திரு. நிஹால்சிங்க. திரு. நிஹால்சிங்க தற்சமயம் அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் முகாமையாளராக இருக்கின்ருர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. திரு. நிஹால்சிங்க ஒரு திறந்த காரைக் கொண்டுவந்திருந்தார். அதில் எம், ஜி ஆர், சரோஜாதேவி இருக்க கார் நொறிஸ் வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தது. எம்.ஜி. ஆர். சென்ற கார் கோட்டை புகையிரத நிலையத்தை அடைந்திருக்கும், ரசிகர்களின் கூட்டம் பெருகிவிட்டது. கார் நகரமுடியவில்லை. தெருவெங்கும் மற்றும் கார்கள் ஓடமுடியாமல் நின்றுவிட்டன. நல்லவேளையாக இந்தக் காருக்கு முன் சென்ற பொலிஸ் வண்டி நெருக்கடியைச் சமாளித்து பத்திரிகைக் காரியாலயத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். பத்திரிகைக் காரியாலயத்தை பார்வையிட்டபின் மீண்டும் திரும்பி ஹோட்டலுக்கு வந்தால் அந்த ஹோட்டலைச் சுற்றி இப்பொழுது பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் கூடிவிட்டார்கள். இதைப் பார்த்த எம். ஜி. ஆர், இந்த இருட்டில் இவர்கள் என்னை நன்ருகப் பார்த்திருக்கமாட்டார்களே! ''இவர்களுக்கு எப்படியும் நன்ருக ஒரு தரிசனம் கொடுக்கலாம். அதற்கான ஒழுங்குகளைச் செய்யுங்கள்'' என்ருர், இவரை அழைத்தவர்களுக்கு அப்படித் தரிசனம் கொடுப்பது விருப்பமில்லை.

(7-ம் பக்கம் பார்க்க)

# ...ருவர்

...ளவு துரிதமாகச் செயல்படு
...ஞர்கள் என்பதை அறிந்த
...ம மனதில் ஒருவித பயம்.
...லங்கையில் ஆரம்பமான
...கெடுபிடி' இந்தியாவுக்குள்
...த்திறங்கியும் விட்ட
...டில்லை. இந்தக் கஷ்டம்
...ப்படியே நீடிக்குமா?
...ன்று அங்கலாய்த்தபடி
...டர்ந்தோம்.

...ஹோட்டலைவிட்டு வெளியே
...ந்த போது ஒருவர் விலைப்
...ட்டியலை எமக்கு நீட்டினர்.
...ங்கிட்டே சாமான்கள்
...ருந்தால் இந்த விலைக்கு
...டுப்போம்' என்று நேரடி
...ாக நம்மை 'பிஸினசு'க்குள்
...ழுத்தார். அங்குவரும் சகல
...லங்கையரிடமும் இவ்வித
...ண்டுகளை அவர் கொடுத்துக்
...காண்டே இருந்தார்.

...கொஞ்சம் பொறுங்க – சுக
...ாக வந்து சேர்ந்தோம் என்று
...ருக்குத் தந்தியடித்துவிட்டு
...ருமேஸ்' என்று சொல்லி
...வரைக் 'கழற்றி' விட்டு நகர்ந்
...தோம்.

...திருச்சியிலிருந்து மூன்று
...லோ மீட்டர் தொலைவில்
...மெயின் கார்ட் கேர்ட்' என்ற
...இடம் இருக்கிறது. திருச்சி
...ன் முக்கிய வியாபார நிலை
...ம் இதுதான்! மலைக்கோட்
...டைப் பிள்ளையார் கோவிலும்
...ங்குதான் இருக்கிறது. மலை
...ச்சியில் அமைந்துள்ள இக்
...கோவிலிலிருந்து பார்த்தால்
...திருச்சிநகரத்தின் பெரும்பகுதி
...தெரிகிறது. பிள்ளையாரைத்
...தரிசித்துவிட்டு இறங்கினேம்.

தொடர்ந்து 'பர்மா பஜார்' என்ற கடை வீதிக்குச் சென்ருேம். வெளிநாட்டுப் பொருட்களை பிரியத்துடன் வாங்கி விற்கும் கேந்திர நிலையம் இது! ஹோட்டல் வாசலில் 'கடதாசி' நீட்டியவரின் விலைப் பட்டியலை இங்கு ஒப்பிட்டுப் பார்த்தோம். அந்த ஆசாமியின் கொள்வனவு விலையையும் 'பர்மா பஜார்' விலையையும் முறையே தருகிறேன்:-

ஒரு போத்தல் தேங்காய் எண்ணை 5-50; 8-50! பார் சோப் 3-00; 5-15! சன்லைட் 80 காசு; 1-10! டேபிள் டெனிஸ் பந்து டசின் ரூபா 9-00; 16-00!

இதனை ஓர் உதாரணங்களுக்காகவே இங்கு குறிப்பிட்டேன். விமான நிலயத்திலிருந்து இறங்கிய நம் சிலோனிலிருந்து யாத்திரிகர்கள் கொண்டு செல்லும் பொருட்களை கொள்ளை மலிவில் வாங்குவதற்கென்று ஒரு கும்பல் அங்கு நிற்கிறது. இதுதான் இவர்களது நாளாந்த பிசினஸ்! யாழ்ப்பாணத்திலிருந்து செல்பவர்கள் மூலம் தினமும் 200 ரூபாவுக்குக் குறையாமல் சம்பாதிக்கிருர்ஒருவர்! ஹோட்டலுக்குச் செல்பவர்கள் நேரடியாக 'பர்மா பஜாருக்கு'ச்சென்ருல், அரசாங்க அனுமதியுடன் கொண்டு செல்லும் அந்தச் சொற்ப பொருட்களை லாப விலைக்குக் கொடுக்கமுடியும்.

விமான நிலையத்தில் 'டியூட்டி' அடிக்கப்படுபவர்களுக்கு விமான நிலையவாசலில் நின்றுகொண்டு 'உதவுபவர்கள்' பற்றி முன்பு சொன்னேன் அல்லவா? அவர்கள் தான் இவர்கள். 90 ரூபாவுக்கு 10 ரூபா வட்டி வீதம் இவர்கள் நம்மவர்களிடம் அறவிடுகிருர்கள் – ஹோட்டலுக்குச் சென்றதும் பணம் கொடுபட வேண்டும். பதிலாக நம்மிடமுள்ள பொருட்களை கொள்ளை

(6-ம் பக்கம் பார்க்க)

# தக்காளி பதார்த்தங்கள்

வழங்குபவர்:

**செல்வி. இரஞ்சியோகுவா**

தக்காளிப்பழ 'சீஸன்' ஆரம்பித்துவிட்டது. மலிவாகக் கிடைக்கும் இப் பழங்களில் பல்வேறு விதமான உணவுப் பதார்த்தங்களைத் தயாரிக்கலாம். எங்கே முயற்சி செய்து பாருங்கள் :-

## தக்காளிக் கறி

தேவையான பொருட்கள் :
தக்காளி – 1 இரு
பெரிய வெங்காயம் – 1/4 இரு
பச்சை மிளகாய் – 6
வெள்ளைப் பூண்டு – 2
இஞ்சி – 1 துண்டு
கொத்தமல்லிக் கூட்டு – 1 சிறிய உருண்டை
கறிவேப்பிலை,
தேவையான அளவு உப்பு
மிளகாய்த்தூள் – 1 மேசைக்கரண்டி
மஞ்சள் தூள் – 1 சிறிய கரண்டி
நல்லெண்ணெய் – 7 மேசைக்கரண்டி
கடுகு – 1/4 தேக்கரண்டி
சீரகத்தூள் – 1 தேக்கரண்டி

### செய்யும் விதம் :

வெங்காயத்தை மெல்லியதாக நீளமாக வெட்டிக் கொள்ளவும். பச்சை மிளகாயைக் கீறிக்கொள்ளவும். பூண்டு தோலுரிக்கவும். இஞ்சியைத் தோல் சீவி சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். தக்காளிப்பழங்களைக் கழுவி சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும். அடுப்பில் கறி செய்யும் சட்டியைக் காயவைத்து எண்ணெய் ஊற்றிக் காய்ந்தவுடன் கடுகு போட்டு, பொரிந்தவுடன் வெங்காயம், பச்சைமிளகாய், பூண்டு, இஞ்சி, எல்லாமாகப் பொன்னிறமாகப் பொரிந்ததும், பின்பு கறிவேப்பிலை, மிளகாய்த்தூள், மஞ்சள் தூள் போட்டு நன்ருகப் பொரிக்கவும். தக்காளிப் பழங்களைப் போட்டு, உப்பையும் போட்டு கொத்தமல்லிக்கூட்டை கொஞ்சத் தண்ணீரில் கரைத்து ஊற்றி சிறு நெருப்பில் கொதிக்கவிடவும். 1/2 மணிக்கு நன்ருகக் குழம்பு பதம் வந்ததும் இறக்கவும்.

## முட்டையும் தக்காளியும்

தேவையான பொருட்கள்:
தக்காளி - 1/4 இரு
வெங்காயம் பெரியது – 1
பச்சை மிளகாய் – 3
கறிவேப்பிலை
நல்லெண்ணை – 2 மேசைக்கரண்டி
முட்டை - 2
தேவையான அளவு உப்பு

### செய்யும் விதம்

தக்காளிப் பழங்களைக் கழுவி சிறு துண்டுகளாக அரிந்து கொள்ளவும். வெங்காயத்தை நீளமாக மெல்லியதாக வெட்டிக்கொள்ளவும். பச்சைமிளகாயைச் சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும். அடுப்பில் வாணலியைக் காயவைத்து எண்ணெயை ஊற்றவும். எண்ணெய் காய்ந்தவுடன் வெங்காயம், பச்சைமிளகாயைப் போட்டுப் பொரிக்கவும். பின்பு தக்காளிப் பழங்களைப்போட்டு உப்பும் போட்டு சிறு நெருப்பில் மூடிவைத்து வேகவிடவும். முக்கால்வாசி வெந்ததும் முட்டைகளை உடைத்து ஒவ்வொன்ருக ஊற்றி நன்ருகக்கிண்டி, நல்ல சட்னி பதம் போல் இருக்கும் பதத்தில் இறக்கிவிடவும். இது ரொட்டிக்கு ஏற்ற கூட்டு.

## தக்காளியும் இருலும்

தேவையான பொருட்கள் :
பெரிய இருல் – 12
மிளகாய்த் தூள் – 1 மேசைக் கரண்டி
சிறிதளவு மஞ்சள், உப்பு
நல்லெண்ணெய் – 1 மேசைக்கரண்டி

(1) செய்யும் விதம் :

இருலை மஞ்சள், மிளகாய்த்தூள் உப்பு தடவி எண்ணெயில் பொரித்துக் கொள்ளவும். முறுகலாக இருக்கக் கூடாது. பின்பு பெரிய தக்காளிப் பழங்கள் 12 எடுத்து நன்ருகக் கழுவிக்கொள்ளவும். பக்கவாட்டில் ஒவ்வொன்றையும் வெட்டிக்கொள்ளவும். ஒவ்வொரு பழத்துக்கும் நடுவில் இருலைவைத்து மூடி அழகாக தட்டில் எடுத்து வைத்துப் பரிமாறவும்.

(2) வேறு விதம்

இருலை உப்பு, மஞ்சள், மிளகாய்த்தூள் போட்டு, சிறிதளவு தண்ணீர் விட்டு வேகவிடவும். தண்ணீர் இருக்கக் கூடாது. பிறகு ஒரு முட்டையை நன்ருக நுரைபொங்க அடித்து ஒவ்வொரு இருலையும் அதில் தோய்த்து எண்ணெயில் பொன்னிறமாகப் பொரித்து எடுத்து ஒவ்வொரு தக்காளியின் நடுவில் வைத்து மேல் பாதியால் மூடிப் பரிமாறவும். விருந்தினர்களை விருந்துக்கு அழைக்கும்போது இவ்விதம் செய்து பாருங்கள்.

## தக்காளி டெஸர்ட்

ஒரே நடுத்தரமான தக்காளிப்பழங்கள் 1 இருத்தல் எடுத்து நல்ல கொதிதண்ணீரில் ஒரு சில விநாடிகள் போட்டு எடுத்து தோலுரித்து 1/4 இருத்தல் சர்க்கரையைப் பாகு காய்ச்சி கம்பி பதத்திற்கு முன்பாக இறக்கி பழங்களைப் போட்டு வைக்கவும். பிறகு ஒரு கிளாஸ் பாலை நன்கு வற்றக் காய்ச்சி 1/2 கிளாஸ் ஆனவுடன் இறக்கி, ஒவ்வொருவருக்கும் பரிமாறும் போது தக்காளிப் பழப் பாகுடன் எடுத்துத் தட்டில் வைத்து, பழங்கள்மேல் வற்றக் காய்ச்சிய பாலை 2 தேக்கரண்டி போல் ஊற்றவும். சாப்பாட்டிற்குப் பிறகு இதை இனிப்புக்குப் பதில் பரிமாறவும்.

# தமிழ் நாட்டில் தி. மு. க.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மலிவு விலையில் எடுத்துவிடு கிருர்கள்.

அன்றிரவே ஸ்ரீரங்கம் சென்ருேம். ஜனவரி 1-ம் திகதி ஏகாதசி தினம்! ஸ்ரீரங்கத்தில் விமரிசையாகக் கொண்டாடப் படும் தினமே ஏகாதசிதான்! ஸ்ரீரங்கத்தில் திரண்டிருந்த ஜனசமுத்திரத்தை எப்படி வர்ணிப்பது? உள்ளே சென்ற நாம் வெளியில் வருவதற்குப் பல கோபுரவாசல்களில்பொலிசாரின் உதவிகளை நாடினேம். திருச்சி ஜங்ஷனுக்கு பஸ் எடுக்கும் பாதையில் பொலிசார் எம்மைக் கூட்டிவந்து விட்டனர்.

## பெண்களுக்கு அதிக மதிப்பு

அப்போதுநேரம்இரவுசுமார் பன்னிரண்டு மணியிருக்கும். நமது நாட்டில் பெண்பிரசுகளுடன் வெளியில் சென்ருல் இந்தச் சாமநேரத்தில் மனித 'பிசாசு'களிடம் தப்பித்துக் கொள்வது சிரமம் அல்லவா? தமிழ்நாட்டில் அப்படியில்லை. பெண்களுக்கு அங்கு நல்ல மரியாதை! எந்தச் சாமத்திலும் பெண்களுடன் கூடிச் செல்வது ஆண்களுக்குப் பாதுகாப்பு என்று சொல்லலாம். அங்கு பெண்களுக்குக் கொடுக்கப்படும் மதிப்பை நினைக்கும் போது எமது நாட்டில் நடக்கும் பல 'அசிங்க' சம்பவங்கள் கண்முன் தோன்றி மறைகின்றன.

## நமது நாட்டு ஆண்களும் பெண்களும்

நமது நாட்டு இ. போ. ச. பஸ்களில் ஓர் ஆசனத்தில் தனித்து ஒரு பெண் இருந்து விட்டால்போதும்! அதற்மேல் சொல்லவேண்டாம். ஆனல் தென்னிந்தியாவில் அப்படி இல்லை. ஒரு பெண் அமர்ந்திருக்கும் ஆசனத்தின் பக்கத்தில் இடமிருந்தாலும் ஆண்கள் இருக்க முடியாது- இருக்கவும்மாட்டார்கள். அதுமட்டு மல்ல பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தமது மனைவியுடனகூட கணவர் இருப்பதில்லை.

## மனைவிக்கு அருகில்

இவ்வித சங்கடம் ஒன்று எமக்கு ஏற்பட்டது. நான் மனைவியுடன் அருகில் இருந்து பிரயாணம் செய்தபோது பஸ் கண்டக்டர் என்னை அணுகிப் பின்னல் நின்றுகொண்டிருக்கும் ''அம்மாளுக்கு சீட்டைக் கொடுங்க சார்'' என்று மிகவும் பணிவாகச் சொன்னர்.

எமது நாட்டில் இவ்வித நடைமுறை அமுலில் இருந்திருக்குமானல்-இவ்விதமான சந்தர்ப்பமொன்றில் பஸ்கண்டக்டர் என்னை எப்படி அணுகியிருப்பார் என்பதையும் விளக்கமாகச் சொல்லவேண்டுமா? பஸ்களில் ஏறும்பிரயாணிகளை முன்னே செல்லுமாறு மிகவும் பணிவுடன் அங்கு சொல்கிருர்கள். 'நவருங்க, நவருங்க' என்று எந்நேரமும் கண்டக்டரின் சப்தம் ஒலித்துக்கொண்டேயிருக்கும். ஆனல் இங்கே 'தள்ளிப்போ; நீ எங்கே போறது' என்பன போன்ற வாக்கியங்கள் சர்வசாதாரணம்-அப்படித்தானே?

இப்படி எல்லாம் தென்னிந்திய பஸ் கண்டக்டர்களைப் பற்றி நான் புளுகிவிட்டேன் அல்லவா?

ஆனல்அந்நாட்டுஅரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் கண்டக்டர்களைப்பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லை.

பிரயாணிகளுடன் எப்படிப் பழகவேண்டும் என்பதுகுறித்து இவர்களுக்கு பயிற்சித்திட்டம் ஒன்று அங்கு நடைமுறைப் படுத்தப்படுகிறது.

## கல்லணை

மறுநாள் கல்லணைக்குச்சென்ருேம். திருச்சி ஜங்ஷனிலிருந்து சுமார் 15 மைல் தொலைவில் உள்ளது – பஸ்சுக்கு 70 காசு! அடிக்கடி சினிமாவில் காணும் கல்லணையை நேரில் காணும் வாய்ப்பை நினைத்து மகிழ்ந்தோம்!

கல்லணையை அண்டி பல சிறு சிறு கிராமங்கள் இருக்கின்றன. இந்தியக் கிராம மக்களின் வாழ்க்கைக்கும் எமது நாட்டுக் கிராம மக்களின் வாழ்க்கைக்கும் அதிக வித்தியாசம் இருப்பதை அங்கு அவதானித்தோம்.

சிறுகுடிசைகளில் அங்குள்ளவர்கள் குடித்தனம் நடத்துகிருர்கள். எங்கு பார்த்தாலும் மிகவும் பதிவான குடிசைகளையேகாணமுடிகிறது.பரந்த பிரதேசத்தில் ஒரே பச்சைப் பசேலென்று காட்சிதரும் நெற்பயிர்கள் எம்மைக் கவர்ந்தன. இந்தியாவில் தற்போது பட்டினி பஞ்சம்கிடையாதுஎன்று துணிந்து சொல்லலாம்.

## இந்திராவின் திட்டத்துக்கு சபாஷ்!

காணி இல்லாதவர்களுக்கு அரசாங்கம் காணி வழங்குகின்றது. நிலச் சுவாந்தர்களிடம் தேங்கிக்கிடந்த காணிகள் நிலமற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனல் இதுவரை காலமும் பட்டினியாலும், வீடில்லாப் பிரச்னையாலும் அல்லற்பட்ட கிராமப்புற மக்கள் அதிக லாபமடைந்துள்ளனர். தமக்கென வழங்கப்பட்டகாணிகளில் சிறு குடிசைகளை அமைத்து, அந்தக் காணிகளிலேயே நெற்பயிர்களை விளைவித்து இவர்கள் தங்கள் வாழ்க்கையை ஓட்டுகிருர்கள். இது இந்திராவின் 20அம்சத்திட்டங்களில்ஒன்று!

## அரசியல் என்ருல் என்ன?

கல்லணைக்கு அருகிலுள்ள ஒருகிராமத்துக்குச்சென்ருேம். அங்குள்ளவர்களுக்கு 'அரசியல்' என்ருல் தின் பண்டமா? என்று கேட்குமளவுக்கு அங்கு அரசியல் இருக்கிறது. இரண்டாம் தரப் பாடசாலை ஒன்றின் தலைமை ஆசிரியர் ஒருவரைச் சந்தித்தோம். அக்கிராமத்தில் சுமார் நாலாயிரம் மக்கள் வசிப்பதாகச் சொன்னர்' படித்தவர்கள் எவ்வளவுபேர் இருப்பார்கள் என்று கேட்டேன்' ஐந்து அல்லது ஆறு பட்டதாரிகள் இருப்பதாகச் சொன்னர். நம்பவே முடியவில்லை!

அரசியலில் ஈடுபாடுள்ளவர்கள்பற்றி விசாரித்தேன். அக்கிராமத்தில் அரசியலில் தீவிரமாக ஈடுபடுபவர்கள் சுமார் பதினைந்துபேர்மட்டில் இருக்கிருர்கள் என்ருர்.

இவர்கள் பொதுமக்கள் மத்தியில் என்ன 'உபதேசம்'செய்கிருர்களோ அதுதான் அங்கு அரசியல்!

என் அருகில் நின்றுகொண்டிருந்த சிவா 'ஈழநாட்டுக்கு நல்ல விஷயங்கள் எல்லாம் கிடைத்துவிட்டன' என்ருர். நான் பத்திரிகையாளன் என்பதை அந்தத் தலைமை ஆசிரியருக்கு ஏற்கனவே சொல்லி வைக்கவில்லையாதலால் சிவா சொன்னதைக் கேட்டும்கேளாததுமாக அவரிடமிருந்துவிடை பெற்றேன்.

## எம். ஜி. ஆர். 'பக்தர்'

எம். ஜி. ஆர். 'பக்தர்' ஒருவரையும் சந்தித்தேன். எம். ஜி. ஆரின் நடிப்புத் திறமையையும், அவர் படங்களில் ஏற்றுக்கொள்ளும் பாத்திரங்களையும் வெகுவாகப்பாராட்டி அவரது அரசியலை நடிப்புக் கண்ணேட்டத்தில் விபரித்தார் அவர்.

## தி.மு. க. ஆதரவாளர்

தி. மு. க. ஆதரவாளரையும் சந்தித்தோம். கருணநிதி தவறு விட்டிட்டார்தான். ஆனல் தி. மு. க.வை தமிழ் நாட்டில் அசைக்கமுடியாது என்று சொன்னர்கள் இவர்கள்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு கலைக்கப் பட்டபின்னர் அங்குள்ள நிலைமைபற்றிக் கேட்டேன். முன்னரெல்லாம் மண்ணெண்ணை, துணிவகை, சீனி போன்றவற்றின் விநியோகத்தில் தடைஏற்பட்டால் ஏதோ வகையில் கத்திக்குளறிப்பெற்றுக்கொள்ளமுடிந்தது. ஆனல் இப்போது வாய்திறந்துகேட்க முடியாதிருக்கிறது என்ருர் ஒருவர்.

(தொடரும்)

# நூல் விமர்சனம்

நூல்: சுவாமி விவேகானந்தர் (கதைப்பாடல்)

ஆசிரியர்: ஸ்ரீ கொத்தமங்கலம்

வெளியிட்டோர்: சிவநெறிப்புரவலர் திரு. க. கனகராசா (மில்க்வைற் தொழில் அதிபர்)

அவர் ஒரு சந்யாசி பிழைப்பிற்காக அவர் அப்படி வேடம் போடவில்லை. மற்றைய சந்யாசிகளிலும் பார்க்க அவர் பல விசேடங்களையுடையவராக இருந்தார். பால் வடியும் முகம் அருள் வடியும் கண்கள், அழகு முகத்திலே சொட்டுகிறது. இப்படி விவேகானந்தரை வர்ணிக்கிருர் கொத்தமங்கலம் சுப்பு அவர்கள்.

பால் வடியும் முகம்
பார்த்தாலே நம்ம
பசியும் தாகமும்
போகுதடி
அருள் வடியும் கண்ணைக்
கண்டதுமே நமக்
கானந்தக் கண்ணீர்
பெருகுமடி'

இவ்வாறு தோற்றும் பால்ய சந்யாசி காவியுடை உடுத்திருந்தாலும் காசைத் தொடமாட்டார், அறிவுக்கடல்

'காவியைக் கட்டின
சந்யாசி
காசைத் தொடாத
சந்யாசி
ஆங்கிலம் பேசுற சந்யாசி
அறிவுக் கடலாம் சந்யாசி'

இவ்வாறு அவரது உள்ளத்தைத் தொட்டுக்காட்டுகிருர் நூலாசிரியர்.

அமெரிக்காவிலே சிக்காகோ நகர்மண்டபத்திலே 'நந்தா ஒளியாய்' விளங்கும் விவேகானந்தர் முகத்தைக் கண்டு வணங்கினர்கள். அவரின் உள்ளத்தின் ஒளி முகத்திலும் வாக்கிலும் பிரகாசித்தது. 'லேடீஸ் அன்ட் ஜென்டில்மென்' என்றுதான் அமெரிக்காவில் பேச்சைஆரம்பிப்பார்கள். ஆனல் விவேகானந்தர் எப்படிப் பேச்சை ஆரம்பித்தார்.

'அமெரிக்க நாட்டில் இருப்பவரே அண்ணனும் தங்கையும் ஆனவரே' என்று ஆரம்பித்தார். அவருடைய பிரசங்கத்தால் அமெரிக்க நாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஆத்மஞானம் அமெரிக்க நாட்டிலே வேரூன்றியது.

'ஆயிரத்தீ வெவனும்
சோலையிலே
ஆத்துமஞானத்தை
நாத்து நட்டு
ஆடவர் மகளிர் ஆனபலர்
அங்கிருந்தே தண்ணீர்
பாய்ச்சி வர'

என இந்த நிலையை நூலாசிரியர் வெகு அழகாகக் கூறுகிருர்.

'திறமையான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம செய்தல் வேண்டும்' என்ற மகாகவி பாரதியாரின் கூற்றுப்படி அமெரிக்கர்கள் தன் புலமையைப் போற்றச்செய்து 'பாரதத் தாய் தன்னை உயர்த்திய ஞானமகனுக' விவேகானந்தர் போற்றப்படுகிருர்.

விவேகானந்தரின் மனத் துணிவிற்கு புகையிரதத்தில் இரு வெள்ளையரோடு மல்லுக்கு நின்றது. அரிச்சந்திர வேடம் போட்ட நடிகரை கடன்காரன் தொல்லையில் இருந்து விடுவித்ததும் சிறந்த உதாரணங்கள்.

இளைஞர்களைக் கவரத்தக்க பாட்டுக்களை இசைப்பதில் கொத்தமங்கலம் சுப்பு திறமை மிக்கவர் அவரது காந்தி மகான் சரிதை அதற்கோர் உதாரணமாகும்.

விவேகானந்தர் பிறப்புத் தொடக்கம், ஆரம்ப வாழ்க்கையில் அவரடைந்த இன்னல்கள், ஆத்ம ஞானத்தில் அவருக்கிருந்த விருப்பு இராமகிருஷ்ணரிடம் உபதேசம்பெற்றமை, அமெரிக்காவில் அவர் அடைந்த புகழ், இந்தியாவில் அவர் புரிந்த தொண்டுகள் யாவும் சுவைபட இனிய ஆனல் இலகு தமிழில் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

இந்த நூல் இளைஞர்களுக்கும் அதேசமயம் பெரியார்களுக்கும் உபயோகமாகும்

(9-ம் பக்கம் பார்க்க)





யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் எவ்வித வாழ்க்கைத் தரத்தையுடையவர்களானுலும்சரி தங்கள் அயராத உழைப்பிற்காக ஒவ்வொரு நாளும் அடுத்த நாளானது விடியும்வரை காத்திருக்கிருர்கள்.

அதேபோல, ஸ்திரமான அபரிமித இலாபத்திற்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொருவரும் எமது முதலீட்டுத் திட்டங்களில் தளராத நம்பிக்கை கொள்ளலாம். எமது முதலீட்டுத்திட்டங்கள் சூரியனைப்போல் பணத்துறையைப் பொறுத்தமட்டில் அளப்பரிய நன்மை பயப்பவை. காரணம், வரையறையற்ற இலாபகரமான பன்முக கைத்தொழில் வளங்களால் வலுவூட்டப்பட்டுவருகின்றன. பத்தாண்டு காலத்திற்குமேலாக புத்திசாலிகளான முதலீட்டாளர்கள் குறைபாடற்ற, பூரண காப்புடைய முதலீடுகளால் மேலான நன்மையடைந்துவந்துள்ளனர். இப்போது நீங்களும் இந்த நன்மைகளை அடையவென உங்கள் வசதியைக் கருதி உங்கள் அருகில் வந்துள்ளோம்.

| குறுகியகாலம் | நீண்ட காலம் |
| --- | --- |
| 11% | 16% |
| வட்டியுடன் ஈடுசெய்த முதலை இலகுவாக திருப்பிப் பெறும் வசதி. | நிலையான 2 வருடங்களுக்கு வட்டி - 12% 3வருடங்களுக்கு -13% 4 வருடங்களுக்கு - 14% 5 வருடங்களும் மேலும் – 16% |

மாதாந்தம் வட்டி பெறலாம்



உறவுஸ் அன்ட் புறொபர்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம் - இல 2-3, நவீன சந்தை, பெரியகடை.

கொழும்பு ஏச்பிரி கட்டடம், டி. எஸ். சேனநாயக மாவத்தை கொழும்பு 8 த. பெ. 1077.

தொலைபேசி 94356, 91471. டெலக்ஸ் -1208.

RAVI-HPT 523

நாடகம்

# சிட்டுக்குருவியும் பருந்தும்

சொக்கன்

காட்சி-1

(தொடர்ச்சி)

இரா: (வாசிக்கிறன்)

அம்மா...உலகத்தில்உள்ள அம்மாக்களெல்லாம் ஒரு மாதிரி நீ ஒரு மாதிரி. நானும் லதாவும் உன் வீடுவந்து உன்னிடம் மன்னிப்புக் கேட்ட போது கடுகளவுகூட இரக்கம் காட்டாமல் எங்களை நோக்கி படலைக் கதவைக் கட்டினயே. அதை என்னல் மறக்கவேமுடியாது. உன் பிணத்திலேகூட நான் விழிக்கப்போவதில்லை. உனக்கென்ன, கொள்ளிவைக்க மலைபோலச் சுப்பு இருக்கிறன். நீ ஏன் பயப்படப்போகிருய்...தயவுசெய்து நீ யாரைக் கொண்டும் எனக்குக் கடிதம் எழுதுவிக்கவேண்டாம். எங்களுக்கிடையேயுள்ள மலை போன்ற பெரும் வேற்றுமை, வேலியாய் எழுந்து நிற்கிறது. அது என்றைக்கும் அழியாது.

இப்பருக்கு

ஒரு காலத்தில் உன் அன்பு

மகனய் இருந்த

இராசரத்தினம்.

இரா: பெரியண்ணைக்கு இவ்வளவு துணிச்சல்எங்கைஇருந்து வந்தது...

சுப்பு: (பரிகாசமாய்ச்சிரித்து) எங்களோடை இருக்கும்வரை அம்மாவின்ரை கொய்யகத்தைப் பிடிச்சுக்கொண்டு திரிஞ்சான். இப்ப அருமை மனைவி லதாவின்ரை முந்தானையைப் பிடிச்சுக்கொண்டு திரியிருனைக்கும்.

புவன: நல்லாய்ச்சொன்னய். இந்தக் காயிதம்கூட அண்ணை எழுதேலை. லதா எழுதி அவர் கையெழுத்து வைச்சிருக்கிறர்.

சுப்பு: இவன் படிச்ச படிப்பாலை என்ன பிரயோசனம். பெரிய எஞ்ஜினியர். ஆனல் சொந்த மூளை இல்லாதவன்... முட்டாள்.

இரா: சின்னண்ணை...என்ன இருந்தாலும் அவர் உங்களுக்கு மூத்தவர். இப்படி நீங்கள் அவரை ஏசக்கூடாது. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்...

சுப்பு: (கோபத்துடன்) ஓமோம். அமிர்தம்தான், கடிதத்திலை வழிஞ்சிருக்கு. நாக்கை நீட்டிக் குடி.

புவன: பார்த்தியே தம்பி. அம்மா செய்த துரோகத்தை எங்களுக்குச் சொன்னல் பேசுவம் எண்டு நினைச்சுயாரையோ கொண்டு கடிதம் எழுதுவிச்சுப் போட்டிருக்கிறு, தன்ரை அருமைப் புத்திரனுக்கு...

சுப்பு: சின்னனிலையும் அம்மா தான் அவனைக் கெடுத்தது. மூத்தபிள்ளை, தலைப்பிள்ளை எண்டு சொல்லிச் செல்லம் குடுத்தா. அவன் குனிஞ்சு ஒரு துரும்பை எடுக்கவும் அனு மதிக்கமாட்டா. என்னையும் உவனையும்தான் நெட்டி வாங்குவா. நான் நெஞ்சுமுறிய முறியத் துலாமிதிக்கேக்கை, இவன் நிழலில இருந்து புத்தகம்படிச்சுக்கொண்டிருப்பான். காலமையிலே அவனுக்குப் பலகாரம், எங்களுக்குப் பழஞ்சோறு. அவவின்ரை வஞ்சகத்துக்கு நல்லபலன் கிடைச்சிட்டுது.

புவ; உம், அம்மா வாற நேரமாயிட்டு. பாவம் அவவின்ரை மனசு ஏன் நோவான்! கடிதம் வந்ததுபற்றி அவவுக்குச் சொல்லவே கூடாது. கவனம்.

சுப்பு; அக்கா. இதெல்லாம் மூடிமறைக்கிற காரியமல்ல அம்மாவுக்குந் தெரியத்தான் வேணும். (இராசம்மா கோயிலிலிருந்து வருகிறள்) "ஊ... ஊ...உ...ஊ.... வெய்யில் பொரிச்செடுத்திட்டுது, கால் நிலத்திலை வைக்கேலேல்லை. அப்பு முருகா...?" (என்றபடி வருகிறள்.)

சுப்பு: உந்த வெப்பத்திலும் கொடிய வெப்பம் வீட்டுக்குள்ளை இருக்குதம்மா. வாருங்கோ.

இராசம்: நீ என்னடா தம்பி சொல்லுருய்.

இராச: பெரியண்ணை கடிதம் எழுதியிருக்கிறர் அம்மா. (வந்து திண்ணையில் இருந்தபடி, என்ன பெரிய தம்பி கடிதம் எழுதியிருக்கிருனே? என்று ஆவலோடு கேட்கிறள்):

புவன; முதலிலை இந்தத் தேத்தண்ணியைக் குடியுங்கோ பிறகு எல்லாம் பேசலாம். [தேநீரைக் கொடுக்கிறள்]

புவன: [ஏளனமாக] அவவின்ரசெல்வப்புத்திரன் எழுதியிருக்கிற, தேன் துளியிலும் உந்தத் தேத்தண்ணியே அவவுக்குச் சுவைக்கப்போகுது?

புவன்: சுப்பு. அம்மா தேத்தண்ணியைக் குடிக்கட்டும். கொஞ்சம் பொறு.

சுப்பு: பல நாளைக்குப் பிறகு மகன் காயிதம் எழுதியிருக்கிறர். அதைக் கேக்கிறதிலும் பெரிய தாகம் அம்மாவுக்கு இருக்குமே? என்னணை, சொல்லுங்கோவன்.

இராசம்: அதிருக்கட்டும். அவன் என்ன எழுதியிருக்கிறன் எண்டு சொல்லன்ராமேனை.

சுப்பு: அப்பிடிக்கேளுங்கோ. இராசாத்தி சாமத்தியப்பட்ட செய்தி கேட்டு மிச்சம் மகிழ்ந்தினமாம், நாளைக்கு யாழ்ப்பாணம் வரத் தம்பதி சமேதராய்ப் புறப்படுகினமாம்; போதுமே.

இராசம்: (அப்பாவித்தனமாக) அப்பிடியே சங்கதி?எடி பிள்ளை அவனைப் பற்றி நீ என்னவோ சொன்னய். பார்த்தியே? என்ரை பிள்ளை எப்படிப்பட்டவனெண்டு இப்பவாவது தெரிஞ்சுகொள்ளுங்கோ...ஓ.

புவன: அவ்வளவுக்கு நீ புண்ணியவதி இல்லை அம்மா,

(விம்முகிறள். இராசாத்தியும் அவள் அழுகையிலே கலந்துகொள்கிறள்.)

சுப்பு; (கோபமாக) இங்கை பாருங்கோ. நீங்கள் கொஞ்சம் உங்கடை அழுகையை நிறுத்துங்கோ.

இரா: (அவலப்பட்டு) என்ன?என்ன?ஏன் அழுறியள்? பெரியதம்பிக்கு ஏதாவது... டே... சுப்பு, ஏன் மரம்மாதிரி நிக்கிருய்? அங்கேயிருந்து என்ன எழுதியிருக்கிறன. சொல்லடா. என்ரை பெத்தவயிறு கொதிக்குதடா, சொல்லு!

சுப்பு: அம்மா உன் பிள்ளை தன்னை மறந்துவிட்டாம். எண்டைக்கு நீஅவரையும்அவர் மனைவியையும் வெளியே போகச் சொன்னியோ அண்டைக்கே உறவு அறுந்துவிட்டுதாம். இனிக் கடிதம் எழுத வேண்டாமாம்.

இரா: (ஏங்கி இடி விழுந்தவளாய்) அப்படியே எழுதி இருக்கிறன்?

சுப்பு: அது மட்டுமல்ல. இராசாத்தியைச் சாட்டித் தன்னிடம் ஏதாவது எதிர்பார்த்தால் அது ஏமாற்றந்தானும். "என்னையே வேண்டாம். என் பணம் மட்டும் வேண்டுமோ? என்று சினிமாவனம் தீட்டியிருக்கிறர்.

இராசம்: சீ. நாயே... இதின்ரை காசுக்குத்தான் நாங்கள் காத்திருக்கிறமாக்கும்...உம் வேறை என்னவாம்!

இராசா: உங்கடை பிணத்திலைகூட விழிக்கமாட்டாராம்.

புவன: எங்களுக்கும் தனக்கும் இடையிலை மலைபோல வேற்றுமை வேலியாக எழுந்து நிற்குதாம்?

இராசா: அது என்றைக்கும் அழியாதாம். (இராசம்மா நெடிய மௌனத்தில் ஆழ்ந்து விடுகிறள்)

(தொடரும்)

தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்—6

# உயர்ந்த கருத்துக்களை இலகு தமிழில் தந்தவர்

வண. எம். ஏ. இரத்தினராஜா

எல்லிஸ் குருவானவரை அடுத்து வந்தவர் ஜேர்மனி தேசத்தைச் சேர்ந்த றேனியஸ் (Rhenius) என்னும் கிறிஸ்தவ குருவாவர். தமிழ்மொழிக்குப் பேச்சாலும் எழுத்தாலும் பெருந்தொண்டு புரிந்தவருள் இவருமொருவராவர்.

இளமையிலேயே தமது தந்தையாரை இழந்த றேனியஸ், கிறிஸ்து பெருமானல் ஆட்கொள்ளப்பட்டவராய் தமது இருபத்திரண்டாம்வயதிலேயே கிறிஸ்தவ திருத்தொண்டில் ஈடுபட்டார். தமிழ்நாடு வந்த றேனியஸ், திருநெல்வேலியிலுள்ள பாளையங்கோட்டைப் பகுதியில் தமது ஊழியத்தை ஆரம்பித்தார். அங்கு வாழ்ந்த தமிழ்ப்புலவர் திருப்பாற்கடல் நாதன் என்பவரை அண்டி அவரிடம் தமிழ்மொழி கற்ருர், நன்னூல் முதலான தமிழ் இலக்கணங்களைக் கற்றுத்தேறிய றேனியஸ் அம்மொழியில் பெரும்பாண்டித்தியம் பெற்ருர், அவரது தமிழறிவு வளம் பெற்றது. தமிழ் மொழியை இனிமையாகப் பேசும் திறமை அவரிடம் காணப்பட்டது. இந்துக்களுமே அவரது இனிய தமிழ் நடையில் சொக்கியவர்களாய் அவரது பிரசங்கங்களைக் கேட்டறிய விரும்பி வந்தனர்,

தமிழ் நாட்டில் ஆண்களைப் போலவே பெண்களும் கல்வி கற்கவெண்டுமென்பது றேனியஸ் ஐயரின் திட்டமான கொள்கையாயிருந்தது. அதிக பிரயாசையோடு பாளையங்கோட்டையில் ஒரு சிறிய பெண் கல்லூரியை ஆரம்பித்தார். அது இன்றும் ஓர் சிறந்த பெண்கள் கல்லூரியாய்த் திகழ்வதைக் காண்கிறோம்.

கிறிஸ்தவ தமிழ்வேதநூலைத் திருத்திப் பதிப்பிக்க விரும்பிய வேதாகம சங்கத்தார் றேனியஸ் ஐயரின் தமிழ்ப்புலமை கண்டு அவரிடமே அந்த வேலையை ஒப்புவித்தனர். சொற்களைத் திருத்துவதிலும் பார்க்க புதிதாகவே மொழி பெயர்ப்புச் செய்வது நலமெனக்கண்ட றேனியஸ், பன்னிரண்டு ஆண்டுகளாக ஆராய்ந்து அரிய தமிழ்மொழி பெயர்ப்பு ஒன்றை ஆக்கினர்!

கிறிஸ்தவ தொண்டில் ஈடுபடுவோர் தமிழ் மொழியை நன்கு அறிந்திருக்கவேண்டுமென றேனியஸ் விரும்பினர். இதற்கு ஆதாரமாக தமிழ் மொழியை எளிதாகக் கற்றுக் கொள்ளக்கூடிய வகையில், தமிழிலக்கணத்தை அறிமுகப் படுத்தும் இலக்கண நூலை ஆக்கவிரும்பி, அழகிய முறையிலே அவ்வித நூல் ஒன்றை ஆக்கினர். எழுத்தியல், சொல்லியல், தொடரியல் என்னும் மூன்று பகுதிகளையுடைய இவ்விலக்கண நூலில், தொடரியல் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றது. எழுவாய், பயனிலை முதலியவற்றை அழகாக உரைநடையில் அமைக்கும் முறையை றேனியஸ் விபரமாக விளக்கிவைத்தார். ஒரு காலத்தில் நன்னூலுக்கு அடுத்ததாகச்சிறந்துவிளங்கிய தமிழ் இலக்கணம் றேனியஸ் ஐயர் வகுத்த இலக்கணமே! இதனையும் ஆக்கியது ஓர் ஐரோப்பிய கிறிஸ்தவ குருவேயாம்!

றேனியஸ் எழுதிய வசன நூல்களும் பலவாம். உயர்ந்த கருத்துக்களை இலகுவானநடையில் எழுதும் திறமை அவரிடம் காணபபட்டது. அவரது வசன நடை அழகானது: இனிமையானது அவர் இயற்றிய 'சமய சாரம்' என்னும்நூலிலே இந்தப் பண்பை நாம் காணலாம்.

அன்று திருநெல்வேலியில் 'டோனவூர்' என அழைக்கப்படும் இடத்தை உருவாக்கியவர் இந்த றேனியஸ் ஐயரே. புலியூர்க் குறிச்சி என்பது இவ்வூரின் பழையபெயர். ஜேர்மனி தேசத்தைச் சேர்ந்த டோஞ என்ற பிரபு ஒருவரிடம் பண உதவிபெற்று, இக்கிராமத்து நிலங்களை விலைக்கு வாங்கி வறுமையால் வாடிய குடும்பங்கள் பலவற்றை இங்கு குடியேற்றிவைத்தார் றேனியஸ். இப்பிரபுவின் கொடையை நினைவு கூரும்வண்ணம் அவ்வூருக்கு டோனவூர்எனப் பெயருமிட்டார். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாந்தபுரம், சந்தோஷபுரம் முதலிய பன்னிரண்டு ஊர்களையும் உருவாக்கியவர் இவரே. தமது சொந்தப் பணத்தையே செலவழித்து தரும ஊழியமாக பாடசாலைகள், வீடுகள். கோவில்கள் பல கட்டி மக்கள் மத்தியில் மகத்தான தொண்டு செய்தவர் இவரே!

பாளையங்கோட்டையின் முகப்பிலே அமைக்கப்பட்டிருக்கும் கிறிஸ்தவ கோவில், றேனியஸ் ஐயரால் அமைக்கப்பட்ட அழகிய கோவிலாம்.

சகல மதத்தவரோடும் சமமாகப் பழகும் தன்மைவாய்ந்தவர் றேனியஸ். அவரது நண்பருள் அநேகர் இந்துக்களும், இஸ்லாமியருமே.

றேனியஸ் சகலத்தையும் ஆராய்ந்து அறியும் ஆற்றல் பெற்றவர். தமது நம்பிக்கையிலும் கொள்கையிலும் கடுகளவும்தவருதவர். நேர்மையும் உண்மையும் கொண்டவரை சமுதாயம் வெறுப்பது சகஜமே. அவ்வகையில் றேனியஸ் ஐயருக்கும் எதிரிடை ஏற்பட்டது' மனமுடைந்த றேனியஸ் உடல் உடையவும் தொடங்கினர். இறுதியில் தமது நாற்பத்தெட்டாம் வயதில். இவ்வுலகை நீத்தார். தமிழ்த்தாயே தன் அருமை மகன் ஒருவனை இழந்து அலறினள். அவரது பிரிவுக்கு இரங்கிய அவர் ஆசிரியர்,

"அனைநிகர் அன்பும் யேசு
வின் அருளும்
அவனியின் பொறையும்
விண்சுடரோன்
தனைநிகர் ஒளியும் மலைநிகர்
வலியும்
தழைத்திட வாழ்ந்தும்
நன்மொழியால்
கனை கழல் வேந்தர் முதலி
னோர்க் கறிவு
காட்டி நற்கதியினைச்
சார்ந்தான்
தினையளவையம் இன்றி நற்
கலைகள்
தேர்ந்த இரேனியூ சென்
போன்"

என இனிமையாய்ப் பாடி இரங்கி நின்ருர்.

(தொடரும்)

## "நிலவே நீ சொல்லு"

நிலவே நிலவே நீ நில்லு —
உந்தன்
நெஞ்சில் உள்ளதை
நீ சொல்லு

எட்டா வானில்
நின்ருயே—எமக்கு
கிட்டா யென்றே
நினைத்தோமே!
விட்டா ராவுனை
நம் மனிதர் —அங்கு
சிட்டாய்ப் பறந்து
வந்தனரே!

மண்ணி லிருந்து
சிலமனிதர் — நெடு
விண்ணைக் கடந்து
உன் வீட்டை
கண்டிட விரைந்து
வந்தார்கள்—உனை
கண்டு குலவி நின்ருர்கள்.

வந்தவர் என்ன
தந்தார்கள்?—வந்து
தந்தவர் என்ன
சொன்னர்கள்?
தந்தனை யோநீ
பெருவிருந்து?—அதை
சிந்தனை செய்தே
நீ சொல்லு!

ஞானம் விண்ணைக்
கடந்ததென்று —இந்த
வானும் நிலவும்
அமைமையென்றும்
கானம் இசைத்து
மகிழுகின்ருர் —அவர்
கானம் உனக்கும்
கேட்கிறதோ?

— பூருகு

# நீதி மன்றத்தில் ஜி. ஜி. யின் சாகசங்கள்

**கா. யோகநாதன்**

ஜி. ஜி. பொன்னம்பலம், வாதாடிய வழக்குகள் எல்லாம், ஆங்கிலத்திலேயேநடைபெற்று வந்தன. அவர் வாதாடும் வழக்குகளைப் பார்க்க நீதிமன்றத்தில் திரளும் மக்களில் பெரும்பாலானவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. மிகுதியில் ஒரு பகுதியினருக்கு ஆங்கிலம் தெரிந்தாலும் ஜி. ஜி.யின் ஆங்கிலம் புரியாது. அப்படியிருந்தும் எதற்காக இவ்வளவு கூட்டம். ஜி. ஜி. யை ஒருமுறை பார்த்து விடவேண்டும் என பலருக்கு ஆசை அவரின், அங்க அசைவுகளை, சாட்சிகளை மடக்குவதை பார்த்துவிடவேண்டும் என சிலருக்கு விருப்பம். ஒருமுறை நீதி மன்றத்திற்கு வந்திருந்த ஒரு வயோதிபரை, பார்த்து 'அப்பு விசாரணை எல்லாம் விளங்கிச்சிதோ' என்று கேட்டேன். அவர் ஒன்றுமே விளங்கவில்லை என்றார். 'அப்படி என்றால் எதற்காக இருக்கிறீர்கள்? என் றுகேட்டேன். 'பொன்னம்பலத்தாரை ஒருக்கால் பார்த்தால் போதாதா? என்ன மாதிரி அந்தாள் பேசுறார். சுப்பிறிம் கோட்டு ராஜாவைக்கூட எதிர்த்துவாதாடுறரே' என்றார்.

## ஆமை வழக்கு

சாவகச்சேரி நீதி மன்றத்தில் ஆமை வழக்கொன்று நடந்தது. 69 ஆமைகளை லொறியில் கொண்டுவந்ததாக குற்றச் சாட்டு. எதிரிசார்பில் ஜி. ஜி. பொன்னம்பலம் ஆஜராகியிருந்தார். அவருக்கு அனுசரணையாக சட்டத்தரணி ஏ. அன்ரனி ஆஜராகியிருந்தார். விசாரணை ஆரம்பமானதும், கிளிநொச்சி இன்ஸ்பெக்டர் அழைக்கப்பட்டார். ஆமைகளை கொண்டு வரும் போது ஒரு பத்திரத்தைச் சமர்ப்பித்துத்தான் எதிரியை கைது செய்யவேண்டும். ஆனால் இந்த வழக்கில் அப்படி நடக்கவில்லை. வழக்கு ஆரம்பமானதும், ஜி. ஜி.இந்த சட்டநுணுக்கத்தை எடுத்துப்போட்டார். இன்ஸ்பெக்டர் விழித்தார். பத்திரமில்லாமல் கைது செய்யலாம் என்று எந்தச் சட்டப்புத்தகத்தில் இருக்கிறது என ஜி.ஜி, கேட்டார். இன்ஸ் பெக்டர் சட்டப் புத்தகத்தகங்களைப் புரட்டினார். பயனில்லை. விசாரணை நடைபெறவில்லை. 10 நிமிடத்தில் வழக்குப்பறந்தது.

இரத்தினபுரிப் பகுதியில் தமிழர் ஒருவர் சிங்களவர் இருவரை சுட்டுக்கொலை செய்துவிட்டதாக வழக்கு. எதிரிகள் சார்பில் ஜி. ஜி. ஆஜராகியிருந்தார். இந்த வழக்கு பரபரப்பான சூழ்நிலையில் நடந்தது. அதுவும் ஜி. ஜி. வாதாடுகிறார் என்றதும் பரபரப்பு அதிகரித்து இருந்தது. முதல் தவணையின் போதே நீதிமன்றம் நிரம்பி வழிந்தது. ஜி. ஜி. யை இந்த வழக்கில் வாதாடாமல் தடுப்பதற்காக, சிங்கள தீவிரவாதிகள் முயற்சி செய்தனர். இரத்தினபுரி நீதிமன்றத்திற்கு வரும் இரு பாதைகளிலும் கறுப்புக்கொடிகளுடன் ஜி.ஜி. யை வழிமறிக்க காத்து நின்றனர். நேரம் போய்க்கொண்டிருந்தது. ஜி. ஜி. யின்காரை காணவில்லை. 10 மணியையும் தாண்டி விட்டது. இனி அவர் வரமாட்டார் என்ற நம்பிக்கையில், கறுப்புக்கொடியுடன் நின்றவர்கள் நீதிமன்றத்திற்கு சென்றார்கள். அங்கு அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஜி. ஜி. அங்கு வாதாடிக் கொண்டிருந்தார்.

## பாண் வழக்கு

தேநீர் கடை முதலாளி ஒருவர், ஒரு றாத்தல் பாணை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க 2 சதம் கூட விற்றுவந்தார். ஒருநாள் கையும் மெய்யுமாக விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியிடம் சிக்கிக் கொண்டார். வழக்கு நடந்தது. கடைக்காரருக்காக ஜி.ஜி. வாதாடினார் 2 சதம் கூட்டி விற்றதை ஜி. ஜி. மறுக்கவில்லை. கடை முதலாளியிடம் பாணை வாங்கிய போது ஒரு முழுப்பேப்பரால் சுற்றி நூலினால் கட்டித்தான் வாங்கியதாக, குறுக்கு விசாரணையில் அதிகாரி ஒப்புக் கொண்டார். அந்த 2 சதம் கடுதாசிக்காகவே கடைக்காரர் வாங்கினர் என்பதுதான் ஜி.ஜி.யின் வாதம். நூலுக்கு வாங்காமல் விட்டுவிட்டார் என்று கூறிய ஜி.ஜி. நூலுக்கும் இன்னும் 2 சதம் கூட வாங்கியிருக்கவேண்டும் என்றும் வாதாடினார். நீதவான் இந்த வாதத்தை ஏற்று எதிரியை விடுதலை செய்தார்.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கில் ஜி. ஜி. எதிரிக்காக ஆஜராகியிருந்தார். முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க அதிக விலையில் பயறை விற்றுவிட்டார். விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியிடமே சிக்கிக் கொண்டார் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி சாட்சியமளித்தார். அதன் பின் ஜி.ஜி. குறுக்கு விசாரணையை ஆரம்பித்தார். எந்தப் பயற்றை விற்றார் என்று ஜி. ஜி. கேட்டதும், பயற்றை விற்றார் என்றுமட்டும் பதில் வந்தது.பயற்றில் பலவகைகள் இருப்பது தெரியுமா? என்று கேட்ட ஜி. ஜி. ஐந்தாறு பயறுகளின் பெயர்களை அடுக்கிக் கொண்டேபோனார். இவைபற்றித் தெரியாது பயறு மட்டும்தான் தெரியும் என்றார் விலைக்கட்டுப்பாட்டதிகாரி.வர்த்தகர்எந்த பயற்றை விற்றார் எனக் கூறமுடியாமல் அவர் விழித்தார். அதன்பின் விசாரணை தொடரவில்லை. எதிரி விடுதலையானர்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒரு வழக்கில், ஜி. ஜி. ஆஜராகாமலே வழக்குப் பறந்தது. மற்றொரு வழக்கில் ஆஜராக வந்த ஜி. ஜி. வழக்கு முடிந்து புறப்படும் போது நீதிமன்ற வாசலில் அவரது ஆதரவாளரில் ஒருவர் நின்றார். 'என்ன விஷயம்' என ஜி. ஜி. கேட்டார். சாராய வழக்கொன்று ஐயா' என்று பதில் வந்தது. ஜி. ஜி. அவசர அவசரமாக விமான நிலையத்திற்குச் சென்றுகொண்டிருந்தார். நின்று கதைக்கவும் நேரமில்லை. ஆனால் ஆதரவாளருக்கு உதவி செய்யாமல் போகவும் மனம் வரவில்லை. 'எப்படியான வழக்கு' எனக் கேட்டார் ஜி. ஜி. 3 போத்தல் கொண்டு வரும் போது பொலிசார் பிடித்துவிட்டனர் என்றார் அவர். ஜி. ஜி. சிறிது நேரம் யோசித்தார். '6 போத்தல் நீ கொண்டுவந்த போது பொலிசார் பிடித்ததாக நீதவானிடம் சொல்லு' என்று கூறிவிட்டு ஜி. ஜி. சென்றுவிட்டார். விசாரணை ஆரம்பமானது. 3 போத்தல் சாராயம் கொண்டுவந்ததற்கு சுற்றவாளியா குற்றவாளியா?- முதலியார் கேட்டார். 'ஐயா நான் 6 போத்தல் கொண்டு வந்தேன். 'மூன்றுக்குத்தானே போலிசார் வழக்குப் போட்டிருக்கிறார்கள்' என்றார் 'சத்தியமாக 6 போத்தல் கொண்டுவந்தபோது தான் பிடித்தார்கள்' என்றார் அவர். நீதவான் வழக்கு முறையாகத் தாக்கல் செய்யப்படவில்லை எனக் கூறி எதிரியை விடுதலை செய்தார்.

எந்த வழக்கென்றாலும்சரி, ஜி. ஜி. இலகுவில் ஆஜராகிவிடமாட்டார். ஆனால் ஜி. ஜி. ஏற்பட்டால், அது கடவுளைக் கண்டமாதிரி எதிரிக்கு இருக்கும். எப்பேர்ப்பட்ட கொலை வழக்கென்றாலும் சரி, ஜி. ஜி. ஏற்பட்டால் அது வெற்றி என்பது நிச்சயமாகிவிடும். யாழ்ப்பாணத்தில் ஒரு கொலை வழக்கில் ஜி. ஜி.யை ஏற்படுத்தமுயற்சிநடந்தது.ஜி.ஜி. அச்சமயத்தில் வெளிநாடு செல்லவிருந்தார். அதனால் 'பீசை'வாங்காமல் நாட்களைக் கடத்திக்கொண்டு வந்தார். எந்தக் கொலை வழக்கிலும் ஜி. ஜி. அட்வான்ஸ் வாங்கிவிட்டாரென்றால் எதிரி தப்பிவிடுவார் என்பது தெரிந்த விஷயம். ஆனால் ஜி. ஜி.க்கு அட்வான்ஸ் கொடுக்குமட்டும் பெரும் அங்கலாய்ப்புத்தான். இந்த வழக்கிலும் அவர் எத்தனையோமுறை கொடுத்தும், ஜி. ஜி. ஏற்க மறுத்துவிட்டார். கடைசியில் எதிரியின் சகோதரர், வேறு வழியில்லாமல் கோட்டை முனியப்பர் கோவிலுக்குச் சென்று 'கற்பூரம் கொளுத்தி' ஜி. ஜி. 'பீசை' வாங்கவேண்டுமென வழிபட்டபின், அன்று மாலை ஜி. ஜி.யிடம் சென்றார்.அன்று ஜி. ஜி. பீசை வாங்கிக்கொண்டார். காரணம் அவர் வெளிநாடு செல்வது பின்போடப்பட்டதுதான். (வளரும்)

### மஞ்சள் பத்திரிகை

சமுதாயத்திற் பெரும பாலோரினால் வாசிக்க முடியாத செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள் ''மஞ்சள் பத்திரிகைகள்'' என்று அழைக்கப்படுகின்றன. இன்றைய பரபரப்பு நிறைந்த உலகில் இத்தகைய பத்திரிகைகள் மிகவும் பெருகியுள்ளன.

இது முதன் முதல் அமெரிக்காவில் ஆரம்பித்து வெளிவந்தது. இப்பத்திரிகை திடுக்கிடும் செய்திகளையும், ஆபாசமான செய்திகளையுமே முக்கியமாகப் பிரசுரித்தது. இப்பத்திரிகையில் வெளியாகும் நகைச்சுவைப்பகுதியில் ஒரு மஞ்சள் நிறமூட்டப்பட்ட ஆட்டுக்குட்டி இடம் பெற்றதனால் இது மஞ்சள் பத்திரிகை எனப் பெயர் பெறலாயிற்று.

பிற்காலத்திற் கொலை, கொள்ளை, சுற்பழிப்புப் போன்ற செய்திகளையும், ஆபாசமான படங்கள், செய்திகள், கட்டுரைகளை வெளியிடும் பத்திரிகைகளும் இப்பெயரினாலேயே அழைக்கப் பெற்றன. குறுகிய வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டும் பத்திரிகைகளும் இப்பிரிவில் வைத்தே எண்ணப்படுகின்றன.

—ஏகேயென்

### றேய்ஸ்டிமெல் வழக்கு

தமிழர் தலைமகன் ஜி ஜி. யின் நீதிமன்ற சாகசங்களை அறிந்திராதவர்களும், அந்நேரம் என்போன்ற சிறுவர்களாக இருந்தவர்களும், அறிந்து மறந்திருந்த பெரியார்களும் அறிவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்த ஒரே ஒரு பத்திரிகையான 'ஈழநாடு' இதழுக்கு என் நன்றியும், வாழ்த்துக்களும்.

புரட்சி சதிவழக்கில் றேய்ஸ் டிமெல்லை கோட்டிற்கு ஜி.ஜி. கொண்டு வந்தது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் இதனை 'தலைமறைவாக இருந்த மெல்லைக் கூட்டிவந்து சரணடையச் செய்தார்' என்று ஒரு வசனத்தில் முடித்து விட்டீர்களே! இவ்வாறு செய்வதன் மூலம் வாசகர்களின் ஆவலை தணியாத தாகமாக மாற்றி விடாதீர்கள்.

**க. தனிநாதன்**
'ஆறுமுகம் இல்லம்'
நெல்லியடி
கரவெட்டி

[றேய்ஸ் டிமெல் விவகாரம் விரைவில்விபரமாக வெளியிடப்படும். [ஆ-ர்]

## சட்டமும் சமுதாயமும்—7

# பேரவைக் கூட்டங்கள்; சனாதிபதியின் அதிகாரம்

**செ. சிறீக்கந்தராசா**

''இலங்கைக் குடியரசின் சனாதிபதி வில்லியம்கோபல்லவ ஆகிய யான், இலங்கை அரசியலமைப்பினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இந்தப் பிரகடனத்தின் மூலம் தேசிய அரசுப்பேரவையின் அமர்வை ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டு பெப்ரவரி மாதம் பத்தாம் தேதியிலிருந்துநிறுத்திவைக்கிறேன், என்பதையும் தேசியஅரசுப் பேரவையின் அடுத்த அமர்வு ஆரம்பிப்பதற்கான தேதியாக 1977-ம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் தேதியை நிர்ணயிக்கிறேன் என்பதையும் நீவீர் அறிவீராக'' என்று கூறும் பிரகடனம் ஒன்று 1977-2-10-ம் தேதியன்று வெளியிடப்பட்ட 251/11-ம் இலக்க அதிவிசேட கசற்றில் வெளியிடப்பட்டது. அதே தேதியில், 251/12-ம் இலக்க அதிவிசேட கசற்றில் வேறுமொரு பிரகடனம் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது.

''இலங்கைக் குடியரசின் சனாதிபதி வில்லியம்கோபல்லவ ஆகிய யான், இலங்கை அரசியலமைப்பினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு இந்தப் பிரகடனத்தின்மூலம், 1977-ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி பிற்பகல் 2 மணிக்குக் கூடுமாறு தேசியஅரசுப்பேரவையை அழைக்கின்றேன்'' மேற்படி பிரகடனங்கள் அதிவிசேட கசற்றில் வெளியிடப்பட்டவுடனும் நாட்டு மக்கள் பலவாறு மறுகினார்கள்; மயங்கினார்கள். தேசியஅரசுப்பேரவையின் அமர்வினை நிறுத்தல் என்ற சொற்றொடரின் பொருள் புரியாமல் தடுமாறினார்கள். ஆங்கிலம் படித்தவர்களுக்கும் (Prorogation) என்ற சொல்லின் பொருள் புரியவில்லை. ஆகவே தேசிய அரசுப்பேரவையின் கூட்டங்களைப் பின்போடுதல் (Adjournment) தேசியஅரசுப் பேரவையின் அமர்வினை நிறுத்திவைத்தல் (Prorogation) தேசியஅரசுப்பேரவையைக் கலைத்தல் (Dissolution) ஆகிய விடயங்களை விளங்கிக் கொள்ள முயல்வோம்.

தேசியஅரசுப்பேரவையினைக் காலத்துக்குக் காலம் பிரகடனத்தின் மூலம் கூடுமாறு அழைக்கவும், அதன் அமர்வினை இடைநிறுத்திவைக்கவும் தேசிய அரசுப்பேரவையைக் கலைக்கவும் சனாதிபதிக்கு அதிகாரமுண்டு என்று முன்பு கூறினோம். தேசிய அரசுப் பேரவையைக் கூடுமாறு அழைத்தல், தேசியஅரசுப் பேரவையின் அமர்வினை இடைநிறுத்தி வைத்தல் என்பன சனாதிபதியின் தத்துவங்கள் பணிகள் என்பவற்றுள் அடங்கும் என்று இன்றைய அரசியலமைப்புச் சட்டத்தின் 21-ம் பிரிவு கூறுகின்றது. ஆண்டுக்கு ஒருமுறையேனும் கூடும்படி தேசியஅரசுப்பேரவையை சனாதிபதி அழைத்தல்வேண்டுமென்று 41(1)ம் பிரிவு சொல்கிறது. பிரகடனத்தின் மூலம் தேசியஅரசுப் பேரவையைக் கூடுமாறு அழைத்துவிட்டால் பின்னர் தேசியஅரசுப் பேரவையின் அமர்வை நிறுத்திவைக்கவேண்டுமானால், அதையும் சனாதிபதி பிரகடனத்தின் மூலம்தான் செய்தல்வேண்டும். (சென்ற மாதம் 10-ம் தேதி வெளியிடப்பட்ட பிரகடனம் தேசிய அரசுப்பேரவையின் அமர்வினை நிறுத்துவதற்கானது என்பதை மனங்கொள்க) தேசியஅரசுப் பேரவையின் அமர்வினைச் சனாதிபதியானவர் இடைநிறுத்திவைக்கலாமெனினும், நான்கு மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு அமர்வினை இடைநிறுத்திவைக்க முடியாது. அமர்வினை இடைநிறுத்திவைக்கின்ற பிரகடனம், தேசியஅரசுப்பேரவையின் அடுத்த அமர்வு எந்தத் தேதியில் தொடங்கும் என்ற விபரத்தைக் கொடுத்தல் அவசியம். அதுமட்டுமல்லாமல் தொடங்கவேண்டும் என்று கூறும் அந்தத் தேதியில் தேசியஅரசுப் பேரவையைக் கூடுமாறு அதனைப் பிரகடனத்தின் மூலம் அழைத்தலும் வேண்டும்.

### கூடும்படி அழைத்தல்

இப்போதைய தேசியஅரசுப் பேரவையின் அமர்வு பிரகடனத்தின் மூலம் மே மாதம் 19-ம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று மேலே கூறினோம். 1977 மே மாதம் 19-ம் திகதிக்கு முன்னர் சனாதிபதி தேசியஅரசுப்பேரவையைக் கூடும்படி அழைக்கலாமா? ஆம் என்கிறது 41(1)ம் பிரிவு. இவ்வாறு கூடும்படி

(9-ம் பக்கம் பார்க்க)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி — வாணிஸ்ரீ
நிறைகுடம்

நாகம்ஸ்
[சுன்னுகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-பத்மினி
ராணி சம்யுக்தா

வெலிங்டன் ஜெய்சங்கர் - ஜெயலலிதா
[யாழ். நகர்]
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
யார் நீ

லிடோ போன்: 7693 சிவகுமார் — ஜெய்சித்ரா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
வெள்ளிக்கிழமை விரதம்
(புதிய பிரதி)

RIO (Jaffna) Daily 4 Shows
Last Day
The Girl Who Couldn't Say No

From Tomorrow THE ARENA
(Adults only)

ராஜா ஸ்ரீகாந்த் - பிரமிளா
[யாழ். நகர்] நாகேஷ் - லக்ஷ்மி (பசு)
தினசரி 4 காட்சிகள் நடித்த
கோமாதா என் குலமாதா
ஈஸ்மன் கலர் (புதியபிரதி)

ஸ்ரீதர் ஃ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் கமலஹாசன் - ஸ்ரீவித்யா
[யாழ். நகர்] சுந்தரராஜன் ஜெயசுதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
அபூர்வ ராகங்கள்

6-வது வெற்றி வாரம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
(யாழ்ப்பாணம்) விரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

ராணி கடைசி 2 தினங்கள்
[யாழ்நகர்] கமலஹாசன் — தீபா - சாவித்திரி
நடித்த
தினசரி 4 காட்சிகள்
அந்தரங்கம்

15-3-77 முதல்
கன்னப்பா
அஞ்சலிதேவி நடித்த
டவுண் பஸ்
(புதிய பிரதி)

ரீகல் தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
(யாழ்ப்பாணம்)
CRAZY BOYS MUSKETEERS
குறும்புக்கார வாள் வீரர்கள்
Crazy Boys are back with the Musketeers to entertain you. Do join in their fun along with your kids.
குறும்புக்காரப் பையன்கள் உங்களை மகிழ்விக்க இங்கு வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் செய்யும் அட்டகாசம் உங்களை வயிறுபுண்ணாகும் வரை சிரிக்க வைக்கும். அவர்களின் குறும்பில் நீங்களும் பங்குகொள்ளத் தவறாதீர்கள்.
From 15-3-77
A Tall Blond Man With One Black Shoe
(color)


## பேரவைக் .........

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பதையும் பிரகடனத்தின் மூலம்தான் செய்தல் வேண்டும். ஆனால் இன்றைய தினம் பிரகடனத்தை வெளியிட்டு, தேசியஅரசுப்பேரவை நாளை கூடுதல்வேண்டும் என்று சனாதிபதி அழைக்கமுடியாது. கூடும்படி அழைக்கும் பிரகடனத்தைவெளியிட்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குப் பிந்திய ஒருநாளில் கூடும்படி அழைக்க முடியும். தேசியஅரசுப்பேரவையின் அமர்வுகள் 19-5-77 வரை இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது என்பது நமக்குத் தெரியும். இவ்வாறு அமர்வு இடைநிறுத்தப்பட்டிருக்கும் காலத்தில் தேசியஅரசுப்பேரவையைக் கலைத்துவிடும் அதிகாரமும் தத்துவமும் சனாதிபதிக்கு உண்டு.

தேசிய அரசுப்பேரவையின் அமர்வு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்கிறோமே இதன் கருத்து என்ன? அமர்வை இடைநிறுத்திவைத்தல் என்பதற்கான வரைவிலக்கணம் எங்களுடைய புதிய அரசியலமைப்புச்சட்டத்தில் காணப்படவில்லை. ஆனால் பழைய அரசியலமைப்பு அரசபேரவைக் கட்டளைச் சட்டத்தின் மூன்றாம் பிரிவில் இந்தச் சொற்றொடருக்கு வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. ''பாராளுமன்றத்தின் அமர்வினை (கூட்டத் தொடரை) முடிவுக்குக் கொண்டுவருதல்'' என்று வியாக்கியானம் கூறுகின்றது அந்தப் பிரிவு. தேசியஅரசுப்பேரவையின் அமர்வை இடைநிறுத்திவைத்தல் என்பதும் தேசியஅரசுப் பேரவையின் கூட்டத்தை ஒத்திவைத்தல் என்பதும் ஒன்றல்ல, அவை வேறு வேறானவிடயங்கள் என்பதை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். தேசியஅரசுப் பேரவையின் அமர்வை நிறுத்துதல் என்பது சனாதிபதியின் தற்கிழமைச் சிறப்புரிமைச் செயல் (Prerogative Act) ஆகும். தேசியஅரசுப்பேரவையானது அதன் அலுவல்களையும் ஆலோசனைகளையும் சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒரு தேதியில் தொடங்குவது போலவே, அது சனாதிபதி விரும்புகின்ற கால எல்லைக்கு அப்பால் அதன் அலுவல்கள் ஆலோசனைகளை தொடர்ந்து நடாத்தவும் முடியாது. ஆனால், சனாதிபதி தலையிடாத வரைக்கும், தேசிய அரசுப் பேரவை அதனது கூட்டங்களைப் பின்போடலாம். அதாவது ஒத்திவைக்கலாம். அமர்வை இடைநிறுத்தி வைப்பது சனாதிபதியினால்மட்டுமே செய்யப்படக்கூடிய செயல். கூட்டத்தை ஒத்திவைப்பது சபாநாயகரால்செய்யப்படும் செயல். தேசியஅரசுப் பேரவை இன்று கூடிச் சில அலுவல்களை ஆராய்கின்றது என்றும் சபாநாயகர் தேசியப் பேரவையின் கூட்டத்தை அடுத்த மாதம் 10-ம் தேதிக்கு ஒத்திப்போடுகின்றார் என்றும் வைத்துக்கொண்டால், இன்று கையாளப்பட்ட அலுவல்கள் இன்று என்ன நிலையில் விடப்பட்டனவோ அந்த நிலையில் அடுத்த மாதம் 10-ம் தேதியில் தொடர்ந்து நடாத்தப்படும்.

தேசிய அரசுப் பேரவையின் அமர்வு நிறுத்தப்பட்டால், தேசிய அரசுப் போவையில் அத்தகைய தேதியில் முடிவுறாதிருந்த எல்லாக் கருமங்களும் அலுவல்களும் விடயங்களும் அப்படியே நின்றுவிடுகின்றன; அதாவது அற்றுப் போய்விடுகின்றன. அதாவது ஒரு சட்டமூலம் இரண்டாவது வாசிப்பு நிலையில் இருக்கிறதென்று வைத்துக்கொண்டால், அமர்வு நிறுத்தப்பட்டவுடனும் அந்தச் சட்டமூலம் அற்றுப் போய்விடும். அதாவது இடைநிறுத்தப்பட்டபின்னர் தேசிய அரசுப் பேரவை தொடங்கும்போது அந்தச் சட்டமூலத்தை அது முதன் முதலாகக் கொணரப்படும் சட்டமூலம் என்றாற்போன்று புதுவதாகச் சமர்ப்பித்தல் வேண்டும்; அமர்வு நிறுத்தப்பட்டபோது இரண்டாவது வாசிப்புநிலையில் இருந்ததென்பதால் அந்த இரண்டாவது வாசிப்பு நிலையில் இருந்து தொடரமுடியாது. இதுபழைய அரசியலமைப்பின் கீழான நிலை.

ஆனால் புதியஅரசியலமைப்பு (22-5-1972) அமர்வு நிறுத்தப்படுவதால், அமர்வு நிறுத்தப்பட்ட தேதியில் முடிவுறாதிருந்த சட்டமூலம் அற்றுப் போய்விடாது என்று கூறுகின்றது. 41 (3) ஆம் பிரிவு பின்வருமாறுகூறுகின்றது. ''தேசிய அரசுப் பேரவையின் அமர்வு நிறுத்தப்படுமிடத்து, அவ்வீதம் அமர்வுநிறுத்தப்படுமுன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏதேனும் சட்டமூலம் அவ்விதம் அமர்வு நிறுத்தப்பட்டதனை உடனடுத்துவரும் அமர்வின்போது தொடர்ந்து கையாளப்படலாம்.''

நான்கு மாதங்களுக்கு மேற்படாது ஒரு காலத்திற்கு தேசிய அரசுப் பேரவையின் அமர்வினைப் பிரகடனத்தின் மூலம் ஜனாதிபதிஇடைநிறுத்தி வைக்கலாம் என்று மேலே கண்டோம். ஆனால் இப்படியான ஒரு நீண்டகாலத்துக்குத் தேசிய அரசுப் பேரவையின் கூட்டத்தை ஒத்திப்போடும் தத்துவம் சபாநாயகருக்குக் கிடையாது.

தேசிய அரசுப் பேரவையைக் கலைத்தல்பற்றிய விடயங்களை அடுத்துவரும் கட்டுரைகளில் பார்ப்போம்.


வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-ஜமுனா
மருதநாட்டுவீரன்


## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முன் நிறுத்தும் மழை அந்த இடமெல்லாம் கணப்பொழுதிலேயேஆற்றுவெள்ளம் வந்துவிட்டதைப்போன்ற வெள்ளம்...ஒரே வெள்ளம்... வாசல் கதவைப் பற்றியபடியே அந்த வெள்ளத்தை வெறித்துப் பார்த்தவண்ணம் நிற்கிறான் முருகன்.

''நான் எங்காவது ஆத்தில குளத்தில விழுந்து செத்துப் போயிடுறன் மச்சான்.''

மாரி கடிதத்தில் எழுதியிருந்த அந்தக் வரிகள்... முருகனின் கையில் இருந்த குழந்தை வீறிட்டு அழுகிறது. அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. அந்தவெள்ளத்தையே வெறித்துப் பார்க்கிறான். அந்த வெள்ளம் பெரிதாகி...வரவரப் பெரிதாகி...அலைகள் அடித்துச் செல்லும் ஆறுபோலாகி... அதில்...அந்த வெள்ளத்தில் மாரியின் தூய்மையான உடல் அலைகளால் அடித்துச்செல்லப் படுவதைப் போன்றதோர் பிரமை முருகனின் மனக்கண் முன் தோன்றுகிறது.

(யாவும் கற்பனை)

## எம். ஜி. ஆர். —

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில் அடுத்தநாள் சுகததாச விளையாட்டரங்கில் நடக்கவிருக்கும் பட்டமளிப்பு விழாவிற்கு வசூல் குறைந்து விடுமென்பது அவர்கள் எண்ணம். ஆனால் எம். ஜி. ஆர். தன் விருப்பப்படி நடந்தே தீர வேண்டுமென உறுதியாக கூறிவிட்டார். இதனால் அவசர அவசரமாக ஒரு ஸ்பொட் (Spot) லைட் எடுத்து இணைத்து எம். ஜி. ஆர். ஹோட்டல் பல்கனியில் சரோஜாதேவியுடன் நிற்க அந்த 'லைட்' அவர்கள் மேல் பட ரசிகர்கள் முண்டி அடித்து கண்குளிர ஆசை தீர எம். ஜி. ஆரைப் பார்த்தார்கள். இதைவிட ஆனந்தம் ரசிகர்களுக்கு வேறு இருக்க முடியுமா? இவர்கள் எல்லோரையும்விட எம். ஜி. ஆருக்கும் இருந்த பெருமிதம் சொல்லிலடங்காது. அதோடு எல்லோரும் சாப்பிட்டுப் படுக்கைக்குச் சென்றுவிட்டார்கள். நானும் என் வீட்டிற்குத் திரும்பினேன்.

## நூல் விமர்சனம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த கதைப்பாடல் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் என்னும் சஞ்சிகையில் வெளிவந்த இந்த நூலை ''மில்க்வைற்,' தொழிலதிபர் ஈழத்து பொதுமக்களுக்கு உபயோகமாகும் விதத்தில் அச்சிட்டு வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா அவாகளின் இத்தகைய தொண்டு மேலும் மேலும் வளர்ந்து சிறப்படையும் என நம்புகிறோம்.

வ. குகசர்மா

## ''நொதேர்ண் ஸ்போர்ட்ஸ்''

வடக்கில் வளர்ந்துவரும் விளையாட்டு வீரர்களுக்கென அவர்களின் விளையாட்டுக்களுக்கு உறுதுணையாக தனியானதொரு சஞ்சிகை இல்லை என்ற குறையை கடந்த மாதம் வெளிவந்த ''நொதேர்ண் ஸ்போட்ஸ்'' என்ற சஞ்சிகை போக்கிவிட்டது என்றே கூறலாம்.

மாதந்தோறும் மலரும்இந்த சஞ்சிகையின்ஆசிரியர் திரு. ஆர் நவரத்தினராஜாவின் முயற்சி விளையாட்டு வீரர்களுக்குமட்டுமல்ல விளையாட்டுப் பிரியர்களினதும் பாராட்டுக்குரியது.

வடமாகாணத்தின் பட்டினங்கள் கிராமங்களின் மூலை முடுக்குகளில் எல்லாம் இலைமறை காய்போல் மறைந்திருக்கும் விளையாட்டு விற்பன்னர்களை வெளிக்கொணர்ந்துஅவர்களை ஊக்குவித்து அவர்களது திறமைகளை ஊரறிய நாடறியச் செய்வதில் இந்த சஞ்சிகை பெரும் பணியாற்றும் என்பதில் ஐயமில்லை.

சஞ்சிகையின் முதலாவது பெப்ரவரி இதழில் வெளிநாட்டு உதைபந்தாட்ட போதல் ஒன்றின் உச்சக் கட்டம் கவரை அலங்கரித்திருக்கிறது.

உள்ளே வடபகுதியில் ஒரு கிரிக்கெட்சாம்ராஜ்யத்தையே உருவாக்கக்கூடிய வகையில் எழுதப்பட்டுள்ள கிரிக்கெட் ஆடுவது எப்படி? என்ற திரு. ஜெயா கனகநாயகத்தின் கட்டுரையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

மற்றும் கிரிக்கெட் டெஸ்ட் சாதனைகள், யாழ். பாடசாலை மாணவர்களின் சாதனைகள் ஆகியன வெளிவந்திருப்பதன் மூலம் விளையாட்டுவீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் விளையாட்டுத்துறை அறிவை வளர்ப்பதுடன் ஊக்கமும்அளிக்கும்.

1980-ல் சோவியத் யூனியனில் நடைபெறஉள்ள ஒலிம்பிக் பற்றிய சிறு விபரமும் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது.

நகர்ப்புறப் பாடசாலை, விளையாட்டுக்கழக மாணவர்களின் சாதனைகளுடன் முக்கியமாக கிராமப்புற வீரர்களின் சாதனைகளும் பல உலக விளையாட்டு விற்பன்னர்களின் திறமைகளும் வெளியிடப்பட வேண்டும்.

விளையாட்டுக்களின் வரலாறுகளும் வரலாற்றுப் புகழ்மிக்க சம்பவங்களும் இச் சஞ்சிகையில் இடம்பெறுவதுடன் உதைபந்தாட்டம், கிரிக்கெட், குத்துச்சண்டை, தாச்சி ஆகியவற்றுக்கு சிறப்பு மலர்களும் வெளிவரவேண்டும்.

—துரைரகு

## வரப்பெற்றோம்

சோவியத்நாடுபிரசுரங்களான அனதோலி உராஸ்கியின் 'சோவியத் சமாதான வேலைத் திட்டத்தின் செயலோட்டம்' பி. ஏ. லாவ்ஷோன்வின் 'அரசியல்அறிவின் அடிப்படைகள்' ஆகிய நூல்கள் வரப்பெற்றோம்.

ஃ ஃ ஃ

'மில்க்வைற்' பங்குனி மாத 15 ம் இதழ் வரப்பெற்றோம். பள்ளிமாணவர்முதல் ஓய்வு பெற்றவயோதிபர் வரை படித்துப் பயன் பெறக்கூடிய பல அம்சங்களைக் கொண்டதாக இவ்விதழ் வெளிவந்துள்ளது.

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

# பதவி வெற்றிடம்

## அகநிலைக்கணக்காய்வாளர் தரம்-II

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கத்தில் அகநிலைக் கணக்காய்வாளர் தரம் IIற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் பூரணப்படுத்தி கல்வித் தராதரப் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பிரதி, அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரப் பிரதிகளுடன் 17-3-77க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர், மானிப்பாய் கோவில் பற்று ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களை நேரடியாகவோ அல்லது தபாலில் பெற விரும்புவோர் ரூ. 1/- தபால் கட்டளையுடன் சொந்த விலாசமிட்ட காகித உறையுடன் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

### தகைமைகள்

1. கூட்டுறவு வேலையாளர் (உயர்தர) தராதரப் பத்திரமும், வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. (சாதாரண) சித்தியும் ஒரு வருடகால அனுபவமும்.
2. கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர் (சாதாரண) தராதரப்பத்திரமும், வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. (சாதாரண) சித்தியுடன் 5 வருடகால அனுபவமும்.
3. ஒரு வருடகால அனுபவத்துடன் கனிஷ்ட சர்வகலாசாலையில் எண்பார்வையிடுதலில் பெற்றுள்ள டிப்ளோமா.
4. 5 வருடகால அனுபவம் உடைய கூட்டுறவுப் பரிசோதகர்.

### வயது

23—40க்கு உட்பட்டவராக இருத்தல்வேண்டும். சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முதலிடம்.

சி. இராசரத்தினம்
பொ. மு.
5670

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி தம்பையா

யாழ்ப்பாணம் வைமன் வீதி நல்லதம்பி தம்பையா காலமானார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், கோபாலரத்தினம் (குடியேற்றத் திட்ட அதிகாரி, பூநகரி), பத்மநாதன் (உரிமையாளர், நாதன் டிரான்ஸ் போர்ட்), பஞ்சாட்சரம் (கிராமசேவையாளர், வன்னேரிக்குளம்), திருமதிகள் தங்கம்மா, நல்லம்மா ஆகியோரின் அருமைத் தந்தையும், ச. மயில்வாகனம், சு. சபாரத்தினம் (உதவி ஆசிரியர், ஈழநாடு), திருமதிகள் சசிகலா, பத்மாவதி ஆகியோரின் மாமனுமாவர். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (13-3-77) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 5675

## மரண அறிவித்தல்

### ]. மரியாம்பிள்ளை

இளைப்பாறிய யாழ். வாடிவீட்டு அதிபரும், மரியா ஹோட்டல் உரிமையாளருமாகிய மரியாம்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் எலிசத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற ஜெயமணி, Dr. ஜெயரட்டினம் (U.K.), யோகராணி ஆகியோரின்அன்புத்தந்தையும், அருளானந்தம், Dr. கமலா (U.K.), சிலுவைராசா ஆகியோரின்மாமனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ். பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு 15-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மரியா ஹோட்டலில் இருந்து எடுத்துச்செல்லப்படும்.

5683

### அபராதம்

யாழ்ப்பாணம், சனி

சட்டவிரோதமாக ஆமை ஒன்றைவைத்திருந்தார். என்ற குற்றச்சாட்டின் பேரில்குருநகர் பொலீசாரால் ரி. சுவாமிநாதன் என்பவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் குற்றத்தை ஒப்புக் கொண்ட எதிரிக்குயாழ்நீதியன்றத்திற்கு கே. வி. நவரத்தினம் 50 ரூபா அபராதம் விதித்தார்.



## தவக்கால நற்சிந்தனை

"தரையினில் உதித்த
கோலம்,
தையல்கை வளர்ந்த
கோலம்
வரையினில் இலர்நத
கோலம்
வனத்தினில் நடந்த
கோலம்
திரைக்கடல் கடந்த கோலம்
சிலுவையில் பொலிந்த
கோலம்
உறைமனம் ஜெபத்தால்
பெற்றேன்
உத்தம போற்றி
போற்றி".

—கிறிஸ்துவின் அருள் வேட்டல்

ஆண்டவரின் சிலுவைக் கோலம் நம் சிந்தையைத் தூய்மைப் படுத்துவதாகும். உலக மகான்களின், மத குருக்களின்— கடவுள்களின் வரலாறுகளைப் பார்க்கின்ற போது பக்தர்கள்தான் பாரம் சுமந்து அவர்கள் வழிபடும் கடவுள்களை அடைந்தார்கள் என்பது வேதங்கள் கூறும் செய்தி. ஆனல் கிறிஸ்துவைப் பொறுத்தமட்டில் நாம் அவரை அடைய பாரம் சுமக்கவில்லை. நமக்காக அவரே சிலுவைப்பாரம் சுமந்தார். என்னே கிறிஸ்துவின் தியாகம்!

நியாயந் தீர்க்கும் நாளில் குற்றவாளிகளைப்போல் ஓடி ஒளித்துக் கொள்ளாமல் ஆண்டவரின் அருகில் அன்புக்கரம் பற்றி ஆனந்தமாக இருக்கவேண்டாமா? அதற்குச் சிலுவையின் கோலம் நமது இதயங்களிலே பதிய வேண்டாமா? சிலுவையின் நிழல் நம் உடல் முழுவதும் பரவிப் பரிசுத்தம்பெற வேண்டாமா?

சிலுவைக்கோலம் சாதாரணமானதா? இந்த மண்ணிலே, மங்கையின் கையிலே, மலையிலே, கானகத்திலே, அலைகடலிலே, பூமியில் பிறந்து, தாய்மடியில் வளர்ந்து, மலைகளில் திரிந்து, கானகத்தில் நடந்து, கடலைக் கடந்து, கடைசியில் சிலுவையில் நமக்காக உதிரக்காட்சி அளிக்கும் கோலமல்லவா! அந்தக் கோலத்தைச் சாதாரணமாகப் பார்க்க முடியுமா? முடியும்! எப்போது முடியும்? ஜெபித்து, ஜெபித்து உள்ளம் உருகி உருகி அழவேண்டும். அப்படித்தான்.

— ஞானஒளி

## சுவீப்—

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 01 J 0920 | 08 J 0850 |
| 18 J 0999 | 45 J 0256 |
| 26 J 0648 | 31 J 0820 |
| 39 J 0230 | 48 J 0552 |
| 16 K 0481 | |
| 32 K 0156 | 39 K 0143 |
| 46 K 0926 | 52 K 0825 |
| 11 L 0461 | 29 L 0238 |
| 67 L 0418 | 02 M 0979 |
| 28 M 0157 | 34 M 0610 |
| 03 N 0303 | 06 N 0742 |
| 25 N 0466 | 40 N 0872 |
| 52 N 0397 | 05 O 0103 |
| 13 O 0357 | 13 O 0481 |
| 22 O 0341 | 23 O 0887 |
| 51 O 0984 | 03 P 0161 |
| 27 P 0349 | 27 P 0642 |
| 32 P 0125 | 39 P 0508 |
| 24 Q 0689 | 30 Q 0242 |
| 52 Q 0565 | 53 Q 0767 |
| 60 Q 0658 | 52 R 0342 |
| 58 R 0785 | 37 S 0234 |
| 43 S 0229 | 45 S 0184 |
| 46 S 0321 | 18 T 0041 |
| 40 T 0322 | 23 U 0262 |
| 28 U 0512 | 42 U 0192 |
| 56 U 0227 | 51 V 0472 |
| 54 V 0153 | 54 V 0972 |
| 10 W 0825 | 04 W 0484 |
| 16 W 0057 | 20 W 0429 |
| 28 W 0679 | |
| 30 W 0968 | 43 W 0481 |
| 59 W 0525 | 09 X 0402 |
| 10 X 0405 | 44 Y 0606 |
| 06 Z 0561 | 26 Z 0115 |
| 36 Z 0137 | |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

## கூட்டணி—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பூஜைக்குபக்தர்கள் அழைக்கப் படுவார்கள் என்றார். மட்டக்களப்பு கூட்டமொன்றில் திரு. இராசதுரை எம். பியை ஒதுங்கியிருந்து ஆலோசனை கூறும்படி தாம் கூறநேர்ந்தது பற்றி குறிப்பிட்ட கவிஞர் தவிர்க்க முடியாத நிலையில் தான் தாம் அந்தக்கருத்தை வெளியிட்டதாகவும் ஆனல் இதனை ஒரு பிரச்சனையாக தொடர்ந்து வளர்க்க விரும்பவில்லையென்றும் சொன்னார்.

### பெண்ணின் காலில்விழுந்து மன்னிப்புகோரினார்

சுன்னாகம், சனி

பஸ் நிலையத்தில் கைக் குழந்தையுடன் காத்து நின்ற இளம் பெண்ணிடம் சரசமாட முயன்ற சுமார் 18 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் சக பிரயாணிகள் பொது மக்களிடம் வகையாக மாட்டிக் கொண்டார். அந்தப் பெண்ணின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கவைத்ததின் பின்னரே அவ்வாலிபர் பொதுமக்களிட மிருந்து விடுபட்டார்.


மிளகாய்ச் செய்கையா:

சுப்பர் சுமித்தியோன்- மிகத்திறமையான பூச்சிக்கொல்லி; பாதுகாப்பானதுங்கூட பெனித்ரோதியோன் கலப்புக்களில் மிக மலிவானது. மிளகாய், வெங்காயம் நெற்பயிர், காய்கறிவகைகள், புகையிலை பழ மரங்கள், பூச்செடிகள் ஆகியவற்றை தாக்கும் பூச்சிகளை அழிப்பது சுப்பர் சுமித்தியோன்.

சுப்பர் சுமித்தியோன் உபயோகியுங்கள்






சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna, Telegrams Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in Sri lanka.